வாரப் பதிப்பு விலை சதம் 25

கலைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

முக்கிய அறிவித்தல்

மில்க் வைற் நீல சோப்

புதிய ரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டு பெரிய கட்டியாக விற்பனை செய்யப்படுகின்றது. வாங்கிப் பாவித்து அதிகலாபம அடையுங்கள்.

ஒரு கட்டி விலை சதம் 20




புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 கார்த். திங்கள் 13-ம் நாள் (28—11—1965) ஞாயிற்றுக்கிழமை ஷ.பான் 4 | இதழ் 27

## "தமிழரசு—ஐ. தே. கட்சி உடன்பாட்டை" எதிர்த்து

# 11-12-65ல் நாடெங்கும் கிளர்ச்சி

தமிழரசுக் கட்சி ஐ. தே. கட்சியுடன் செய்து கொண்டுள்ள உடன்பாட்டை எதிர்த்து நாட்டிலே ஒரு வகுப்புக் கிளர்ச்சியைத் தூண்ட பெரு முயற்சி செய்கின்றனரென்றும், சிங்கள ஜாதிக்க சங்கமும், நாம் சிங்கள இயக்கமும் டிசம்பர் 11ந் திகதி நாடு பூராவும் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்க இருக்கின்றனவென்றும் அறியப்படுகிறது. இக் கிளர்ச்சியை யொட்டி பாராளுமன்றத்தில் இந்த உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தின் மீது ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க் கட்சிகள் கொண்டு வருமென்றும் தெரிகிறது.

## எதிர்க் கட்சியினர் செய்யும் ஏற்பாடுகள்

### நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வருமாம்

''டட்லி சேனநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம்'' என்ற பெயரால் ஒரு ஒப்பந்தத்தை இரு வாரங்களுக்கு முன்பு ''ஜனதின'' என்னும் இடதுசாரி சிங்களத் தினசரி வெளியிட்டது. அன்றிலிருந்து இடதுசாரிப் பத்திரிகைகள் அனைத்தும் உடன்பாட்டை எதிர்த்து பலத்த கிளர்ச்சி செய்யத் தொடங்கியுள்ளன.

உடன்பாட்டைக் கண்டித்து பல்வேறு பிக்குகளிடம் அறிக்கைகள் வாங்கி இப் பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன. ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு வற்புறுத்தி தலையங்கங்கள் தீட்டுகின்றன. திரு. டட்லி சேனநாயக்கா சிங்கள இனத்தையே காட்டிக் கொடுத்துவிட்டதாகவும், நாட்டைத் துண்டாடத் தமிழரசுக் கட்சியுடன் இரகசிய உடன்படிக்கை செய்திருப்பதாகவும் செய்திகளைப் பிரசுரித்து சிங்கள மக்களிடையே ஒரு கொந்தளிப்பை உருவாக்க முயற்சி செய்கின்றன.

### நாடெங்கும் கிளர்ச்சிக்கு ஏற்பாடு

இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து வண. பத்தேவிமலவன்ச நாயக்க தேரோ தலைமையில் ''சிங்கள ஜாதிக்க சங்கம்'' ஓர் இயக்கம் ஆரம்பிக்கப் போவதாக அறியப்படுகிறது.

திரு. ஆர். ஜி. சேனநாயக்கா, செனட்டர் வர்ணன் தஸநாயக்கா, முன்னாள் எம். பி. திரு. வில்லி

(9ம்-பக்கம் பார்க்க)

**சுருட்டுக் கைத்தொழில்**

பற்றிய

**முதல் ஆராய்ச்சிக் கட்டுரை**

**டிசம்பர் 5ம் திகதி**

இதழில் ஆரம்பமாகிறது

எழுதுபவர்!

க. குணராஜா பி. ஏ. (ஆனர்சு)

விரிவுரையாளர் இலங்கைப் பல்கலைக் கழகம்

## சிங்கள நிபந்தனை நீக்கப்படும்

### பதவி உயர்வுப் பரீட்சைக்கு சகலரும் தோற்றலாம்

அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் 29 ம் நாள் நடைபெறவிருக்கும் அரசாங்க எழுதுவினைஞர்களுக்கான நிர்வாக வகுப்பு தரம் இரண்டிற்கான உயர்வுப் பரீட்சைக்கு சகல எழுதுவினைஞர்களும் தோற்றலாம் என்று கூறும் சுற்று நிருபம் ஒன்று அடுத்தவார முற்பகுதியில் வெளியிடப்படுமென திறைசேரி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. தமிழ் மொழி மூலம் சேவையில் சேர்ந்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், அவர்களுக்கான பரீட்சை தமிழ் மொழி மூலமே நடாத்தபடும் என்றும் தெரியவருகிறது.

நிர்வாக வகுப்பு தரம் இரண்டிற்கான பதவி உயர்வுப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் எழுதுவினைஞர்கள் சிங்கள மொழித் தகைமைப் பரீட்சையில் ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்திருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்த நிபந்தனை நீக்கப்பட்டுவிட்டதாகக் கூறும் சுற்று நிருபம் ஒன்றைத் திறைசேரி மேலதிகச் செயலாளர் வெளியிடவிருப்பதாக திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இப் பரீட்சைக்கு சகல எழுதுவினைஞர்களும் தோற்ற முடியும் என்பதுடன் தமிழ் மொழி மூலம் சேவைக்குச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையைத் தமிழ் மொழி மூலம் எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

இப்பரீட்சைக்கான முன்னைய அறிவித்தலை இப்பொழுது வெளியாகும் சற்று நிருபம் இரத்து செய்யும் என்றும், பரீட்சை பெரும்பாலும் பிற்போடப்படலாம் என்றும் நம்பப்படுகிறது. இது பற்றி அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. வே. தங்கவேலு திறைசேரி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் தெரிகிறது.

**"மெய்கண்டான்"**

| | | |
|---|---|---|
| திருக்குறட் கலன்டர் No. 1 ஸ்பெஷல் | | 2-40 |
| நன்மொழிக் கலன்டர் No. 2 | | 1-35 |
| மாதக் கலன்டர் (பஞ்சாங்கக் கலன்டர்) | | -85 |
| சிங்களக் கலன்டர் (No. 1 கலன்டர் அளவுள்ளது) | ” | 2-15 |
| ரேபிள் கலன்டர் (பிளாஸ்ரிக் ஸ்ரான்டுடன்) | | 5-50 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | | 2-75 |
| No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | | 2-75 |
| No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி | ” | 2-20 |
| No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி | ” | 3-60 |
| No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி | ” | 2-20 |
| No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி | ” | 1-75 |
| No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | | 3-85 |
| No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | | 3-30 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | | 3-55 |
| பிளாஸ்ரிக் சிங்கள டயறி | ” | 2-20 |
| பேர்ஸ் சிங்கள டயறி | ” | 3-30 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | ” | 5-50 |
| No. 1 பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம் With Purse) | | 3-70 |
| No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி | ” | 3-15 |
| No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி | ” | 3-15 |
| No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி | ” | 2-75 |
| No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | | 4-95 |
| No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | | 4-40 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | | 5-25 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | | 6-50 |
| ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | | 1-85 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | | 2-75 |

இன்னும் பல உண்டு.

காகிதப் பஞ்சம் காரணமாக சொற்ப தொகையே தயாரித்துள்ளோம். பிந்தினல் கிடைப்பதரிது—இரட்டிப்பு விலை கொடுத்தும் வாங்க வேண்டி நேரிடலாம்.

மற்றும் விபரங்களுக்கு:

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

போன் : 79141

கிளை : யாழ்ப்பாணம் — போன் : 236.

# காப்பியங்கள் காட்டும் கவினுறு நாடுகள்

தமிழ்ப் பெருங் காப்பியங்களில் நாம் கண்ணுறும் நாட்டு வளமும், நகர வளனும் புலவர்கள் கண்ட புத்துலகமாகப் பொலிகின்றன. பண்டைப் புலவர்கள் கன்னல் நிகர் தண்டமிழ்ச் செய்யுட்களால் சித்திரிக்கும் புத்துலகு, வையகமெலாம், பசியும், பிணியும் அற்று, வசியும் வளனும் பெற்று எல்லாரும்எல்லாம்கொண்டு இன்பந் துய்க்க வேண்டுமென்ற கவிஞர்களின் கனவினைய காட்டுகின்றது. 'அணுவைத் துளைத்து எழு கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறட்' பாவால் வான் புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை ஒரு நல்ல நாட்டிற்கு இலக்கணம் வகுக்கையில்:

'உறுபசியும் ஓவாப் பிணியும்
செறுபகையும்
சேராதியல்வது நாடு'

என்று கூறிப் போந்தார்.

நாடாயிருப்பினும், காடாயிருப்பினும், பளளமாயிருப்பினும், மேடாயிருப்பினும் நிலம் சிறப்புக்கு அடிப்படையன்று. வறண்ட பாலைவனமாயினும் அங்கு வதியும் மக்கள் நல்லவர்களாகி விட்டால் அந்நாடு சிறப்புக்குரியது என்கிறார் பைந்தமிழ் மூதாட்டியான ஔவை:

'நாடா கொன்றோ
காடா கொன்றோ
அவலா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய
நிலனே'

'என்றுமுள்ள தென்றமி'ழில் இராம காதை இயம்பி இசை கொண்ட கம்பன் காட்டும் கோசலமும், மக்கத்து மாநபியின் வரலாற்றை மணிக் கவிதைகளால் ஆக்கிய உமறுப் புலவர் கண்ட அறபியாவும், தீந்தமிழில் திருத்தக்க தேவர் செய்த சிந்தாமணியில் வரும் ஏமாங்கதமும், வில்லிபுத்தூர்வார் விளக்கும் குருபாஞ்சாலமும், வீரமா முனிவர் சித்திரிக்கும் யூதேய நாடும், 'வெண்பாவிற் புகழேந்தி' வர்ணிக்கும் நிடத நாடும், பாட்டுக் கொரு புலவன்' பாரதியின் குருநாடும் புலவர்கள் கண்ட புதியதோர் உலகமாகும்.

பெருங் காப்பியத்திற்கு இலக்கணங் கூறப் போந்த தொல்காப்பியம் 'தன்னிகரில்லாத் தலைவனையுடைத் தாய் மலைகடல் நாடு வளநகர் பருவம் இருசுடர்த் தோற்றமென்று இனையன புனைந்து...' என்று குறிப்பிடுகிறது. தன்னிகரில்லாத் தலைவனொருவனைக் கதாநாயகனாகக் கொண்டொளிரும் காப்பியங்களில் எல்லாம் மரபுக்கேற்ப நாட்டு நகர வர்ணனைகள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். காவியத் தலைவர்களின் நாடுகளை வர்ணிக்கப் புகும் புலவர்கள் அந்நாடுகளின் இயற்கை வளனையும், மக்களின் வாழ்வு முறைமையினையும் எடுத்துரைப்பர். இவ்வாறு நாட்டு, நகர வளனைக் கூறப் போந்த புலவர்கள் காவியத் தலைவர்களின் நாடுகளைப் பூலோக சுவர்க்கமாகவும், அந்நாட்டு மக்களை அறப்பண்பின் இருப்பிடமாகவுமே காட்டியிருப்பதைக் காண்கிறோம் தமிழ்ப் புலவர்கள் நாட்டு நகர வருணனை என்ற பெயரில் ஒரு கனவுலகத்தையே படைத்திருக்கின்றனர். நாட்டு வளம் கூறப் போந்த இப்புலவர்கள் தமது காவியத் தலைவர்களின் நாட்டுத் தடாகங்களையும், வயல் நிலங்களையும் பொழில்களையும், மக்கள் வாழ்வு முறைமைகளையும் பாடியிருக்கும் முறையில் ஒருவகை ஒற்றுமையையும் காணலாம்.

## ஏமாங்கதம்

திருத்தக்கதேவர் தமது சீவக சிந்தாமணியிற் காட்டும் எழிலுமிழ் ஏமாந்தக நாட்டினை முதலிற் காண்போம். ஒரு நாடு செழிப்புறுவதற்கு உரிய காலத்தில் மழை பெய்தல் வேண்டும். மழை என்னும் வருவாய் வளம் குன்றிப் போனால் ஆங்கு உணவின்றி மக்கள் துன்புறுவர். ஏமாங்கத நாட்டில் உரிய காலத்தில் போதியளவு மழை பெய்கிறது. யாண்டும் வெள்ளக் காடு. பயிர்கள் எல்லாம் செழிப்புற்று விளைவுற்று நிற்கின்றன. இந்நிலையில் அருவி வெள்ளம் பரவுகிறது. மலையைத் தழுவிச் செல்லும் வெள்ளம் குறிஞ்சி நிலத்திலுள்ள பொன், மணி ஆதிய 'கொழு நிதிக் குப்பை'யை அள்ளிச் செல்கிறது. இல்லை என்று வருவோர்க்கு இல்லை எனாது ஈயும் வள்ளல்களைப் போல அப்பொருட்களை எல்லாம் மக்களுக்கு வழங்குகிறது வெள்ளம். அந்நாட்டவர் உழைத்துப் பொருள் தேடுபவர்கள். எனவே எல்லார்க்கும் பொருளைப் பங்கிட வேண்டியிருக்கவில்லை. உழைக்க உளமின்றி ஓய்ந்து கிடக்கும் சோம்பேறிகளுக்கே பொருட்களை வழங்குகிறது வெள்ளம்.

**யூ. எல். தாவூத்**

'வள்ளற் கைத்தல
மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட
கொழு நிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்
கூர்தோறும் உய்த்துராய்
வெள்ளம் நாடு மடுத்து
விரைந்ததே'
(சிந்தா:6)

ஏமாங்கத நாட்டில் வதியும் மக்களனைவரும் பல்வகையான இன்பங்களைத் துய்த்து இறும்பூதெய்துகின்றனர். தாம் தாம் விரும்புந் தொழில்களைப் புரிவதற்கு வாய்ப்பும், உரிமையும் பெற்றுள்ள அம்மக்கள், தங்களின் 'தினவு' களுக்கேற்ப ஒழுக்கத்தினையும் கடைப்பிடிக்கும் உரிமையையும் உடையோராவர். இவ்வாறு மக்களின் உரிமை நல்கும் நாடாக விளங்கும் ஏமாங்கதத்தில் வாழ்வோர் வளனுறு வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் பெற்றிருந்தனர். இதனால் தாம் விருப்பும் ஒழுக்கத்தை மேற்கொள்ளும் வாய்ப்பினையும் கொண்டிருந்தனர். வீடு பேற்றைப் பெறுதற்கு விழைந்தோர் தவத்தில் ஈடுபட்டுள்ளனர். கல்வி ஞானம் பெற விரும்பியோர் நூல் பல பயின்று அறிவைப் பெருக்குவதில் முனைந்துள்ளனர். செல்வம் சேர்க்க நாடியோர் பொருள் தேடும் முயற்சியில் மூழ்கியுள்ளனர். இவ்வாறு. யார் எதனைப் பெற விரும்புகின்றனரோ அவர்கள் அதனைப் பெறுவதற்கு ஏற்புடைய நாடான அந்நாடு வேறுபல நாடுகளாற் சூழப்பட்டு விளங்குகிறது. இவ்வாறு ஏமாங்க நாட்டு மக்களின் வளனுறு வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார் திருத்தக்க தேவர்.

'நற்றவஞ் செய்வார்க் கிடம்
தவஞ்
செய்வார்க்கு மஃதிடம்
நற்பொருள் செய்வார்க்கு
மிடம் பொருள்
செய்வார்க்கு மஃதிடம்
வெற்ற இன்பம்
விழைவிப்பான்
விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்டமாக வீழ
வைகுமற்ற நாடதோ'

(வளரும்)

# சிலாபத்தில் முத்தமிழ் விழா

சிலாபம் தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழா நவம்பர் 13, 14-ம் திகதிகளில் சிலாபம் சென்மேரீஸ் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது. இலங்கைப் பல்கலைக் கழக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் தமிழறிஞர்களும், கவிஞர்களும், கலைஞர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

13-ந் தேதி சனிக்கிழமை மாலை 'அருள் வாக்கி' அப்துல் காதிறுப் புலவர் அரங்கில் ஜனப் எம். அப்துல் வகாப் தலைமையில் முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மன்றத் தலைவர் திரு. கே. கதிரவேலு வரவேற்புரை நிகழ்த்தினார். பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களான திரு. ச. தனஞ்செயராசசிங்கம் பழந்தமிழ் இலக்கியம் பற்றியும், ஜனப் ஏ. சீ. எல். அமீர் அலி இன்றைய சமுதாயத்தில் எழுத்தாளர் பணிபற்றியும், திரு. சி. தில்லைநாதன் இலக்கணமும் இன்றைய தமிழும் பற்றியும் பேசினர்.

ஜனப் செய்யது அகமது, செல்வி யோகா வல்லிபுரம், திரு. எஸ். பொன்னுத்துரை பி ஏ ஆகியோரும் உரையாற்றினர். ஜனப் எம். ஏ. ரஹ்மான் எழுதிய 'இளமைப் பருவத்திலே!' நூல் அரங்கேற்றமும் நடைபெற்றது.

14-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை பேராசிரியர் அ. சின்னத்தம்பி தலைமையில், பேராசிரியர் மயில்வாகனம், ஜனப் எம். எம் உவைஸ். எம். ஏ, திரு. எஸ். தனஞ்சயராசசிங்கம் ஆகியோர் சமயத் தமிழ் ஆய்வுரை நிகழ்த்தினர். மாலை பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரம் அரங்கில் மஹாகவி, முருகையன், சத்தியசீலன், நுஃமான் ஆகிய நான்கு கவிஞர்கள் ஆ. கந்தையா எம். ஏ. தலைமையில், 'நரகத்துழலுவதோ? என்ற பொருள் பற்றிய கவிதைகளை அரங்கேற்றினர். இலக்கியப் பேரரங்கில் திரு. ஆ. கந்தையா, திரு. மகேசன் பி. ஏ. பண்டிதர் பசுபதியின் தலைமையில் உரை நிகழ்த்தினர்கள் இரண்டாம் நாள் விழாவை துணை நீதி அமைச்சரும் புத்தளப் பாராளு மன்ற உறுப்பினருமான ஜனப் எம். எஸ் எம். நெய்னாமரைக்கார் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, அகில இலங்கைச் சிறுகதைப் போட்டி முதலியவற்றில் பரிசு பெற்றோருக்கு சிலாபம் பாராளுமன்ற உறுப்பினரும், உதவி சபா நாயகருமான திரு. எஸ். சி. ஷர்லிகொரியா பரிசுகளை வழங்கினார். சானவின் அசட்டு வேலைக்காரன், ராஜ், சான கோஷ்டியினரது சக்கடத்தார் எனும் நாடகங்களும் நடைபெற்றன. சிலாபப் பகுதியும் ஒரு தமிழ்ப் பிரதேசமே என்பதை முத்தமிழ் விழா உணர்த்திக் காட்டிவிட்டதெனலாம்!

# 'இளமைப் பருவத்திலே' வெளியீட்டு விழா

ஜனப் எம். ஏ. ரஹ்மான் எழுதிய 'இளமைப் பருவத்திலே' என்ற நூலின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு அறிமுக விழா 14-11-65 அன்று சிலாபம் சென்மேரீஸ் கல்லூரியில் நடைபெற்றது. இது சிலாபம் தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளுடன் இடம் பெற்றது.

இவ்வறிமுக விழாவில் திரு. எஸ். பொன்னுத்துரை பி. ஏ. ஹாபிஸ் செய்யது அகமது, வித்துவான் நடராசா முதலியோர் கலந்து கொண்டு மதிப்புரை வழங்கினர்.

திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில், 'இந்நூல் பல பெரியார்களின் இளமைப்பருவமும், புகழ் வாழ்வும் நேர் வித்தியாசமாக அமைந்துள்ள தன்மையைக் காட்டுகிறது. அத்தகைய ஓர்இளமைப்பருவவாழ்க்கை காலஞ்சென்ற சர் வின்ஸ்டன் சர்ச்சிலினுடையது. இந்நூலின் முதற்பதிப்பு வெளிவந்தபோது அவர் உயிருடன் இருந்தார். அவருக்கும் ஒருபிரதி அனுப்பப் பட்டது. அதைப் படித்துப் பார்த்த அவர் தனது இளமைப் பருவத்தையெண்ணிப் பார்க்குமிடத்து நாணமடைவதாகக் குறிப்பிட்டார் இவ்வாறு பல உண்மை நிகழ்ச்சிகளை எளிய தமிழில். சிறிய வசனங்களில் தந்துள்ள ரஹ்மான் அவர்கள் பாராட்டுக்குரியவர்' என்றார்.

தமிழ் மன்றத்தலைவர் திரு. கே. கதிரவேலு பி. ஏ. நூலின் முதற்பிரதியை வாங்கி விற்பனையைத் தொடக்கி வைத்தார். ஜனப் செய்யது அகமது மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் இளமையுடன் தொடர்புள்ள விடயங்களை விளக்கிக் காட்டினார்.

நன்றி தெரிவித்துப் பேசிய ஜனப் ரஹ்மான், தனது நூலின் இரண்டாவது பதிப்பைத் தானே இவ்வளவு விரைவில் வெளியிடும் பேறு கிடைத்தமையைப் பணிவுடனும், அடக்கத்துடனும் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். ஜனப் எஸ். எம். ஜே. பைஸ்தீன் இளமைப் பருவத்திலே போன்ற ஒரு சிறந்த நூலை வெளியிட வாய்ப்பளித்தமைக்காக ஜனப் ரஹ்மானுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

---

# 'இலக்கிய வட்டம்'

அண்மையில் இலக்கிய நண்பர்கள் பலர் சேர்ந்து 'யாழ். இலக்கிய வட்டம்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை அமைத்துள்ளனர்.

இலக்கிய வட்டத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: இரசிகமணி. கனகசெந்திநாதன் துணைத் தலைவர்: க. சி. குலரத்தினம். செயலாளர்:- நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) துணைச் செயலாளர்:- எஸ். சபாரத்தினம் (சகிபாரதி) பொருளாளர்:- கவிஞர். இ. அம்பிகைபாகன் (அம்பி) செயற்குழு உறுப்பினர்கள்;- கே. வி. நடராஜன், வே. இ. பாக்கியநாதன், செம்பியன் செல்வன், ஏ. ரி. பொன்னுத்துரை, பி. யேக்கப், எஸ். செல்வத்துரை.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்!

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு-11.




மனோன்மணி,
மதுளை

கே: பிழையின்றி சரியாகக் காதலிக்க காதல் இலக்கணம் கற்க வேண்டுமா?

ப: போதாது, காதல் இலக்கியமும் கற்க வேண்டும்.

ஃ

குழந்தை வேலு,
கண்டாவளை

கே: நானும் எனது நண்பனும் ஒரு பெண்ணைக் காதலிக்கிறோம். முடிவு எப்படியாகும்?

ப: உங்கள் இருவருக்குமிடையே திடீரென முளைக்கும் ஒரு மூன்ரும் பேர்வழி பெண்ணைத் தட்டிக்கொண்டு போய்விடுவான். இதுதான் முடிவு.

ஃ

செல்வி ஆனந்தி,
மாதகல்

கே: நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துள்ள ஒப்பந்தம் என்ன?

ப: நான் எந்த அரசியற் கட்சியுடனும் ஒப்பந்தம் செய்யவில்லை. ஆனல் கேள்விகளுக்கு பதிலளிப்பதாக வாசகர்களுடன் மட்டும் ஓர் எழுதப்படாத ஒப்பந்தம் செயது கொண்டுள்ளேன்.

ஃ

ஏ. எச். ஏ. பரீத்,
கிண்ணியா

கே; படித்தவனும் படியாதவனும் நட்புக்கொண்டால் அவர்கள் நட்பு எவ்வாறு இருக்கும்.

ப: படித்தவனின் மனோநிலையைப் பொறுத்து இந் நட்பு வளர்ச்சி பெறும். ஆனல் இந்த நட்பால் படியாதவன் படித்துவிடுவான் சந்தன மரத்தைத் தழுவிய காட்டுக்கொடி வாசனை பெறுவதைப்போல.

ஃ

'மொழிவாணன்',
இரத்தினபுரி

கே: தாம் வசிக்கும் பகுதியில் தாங்கள் சிறுபான்மையினராக இருக்கும் காரணத்தால் திருமலையில் 'நாம் சிங்களவர்' இயக்கம் ஆரம்பித்திருக்கும் முன்னள் கூட்டாட்சியினர் தாம் வசிக்கும் நாட்டில் தாம் சிறுபான்மையினராக இருப்பதால தமிழர் 'நாம் தமிழர்' இயக்கத்தை ஆரம்பிப்பதை வகுப்புவாதம் என்று சொல்லுகிருர்களே.

ப: இக்காலத்து அரசியலென்பது கண்ணுடி வீட்டிலிருந்து கல்லெறிவதுதான். தனது வகுப்புவாத நடவடிக்கையை மறைக்கும் போர்வைதான் பிறர் செய்வதை வகுப்புவாத மெனக் குற்றஞ்சாட்டுவது.

ஃ

ஏ. எச். ஏ. அனிக்கட்செல்வன்,
சி. கின்னியா. 1

கே: நான் சதா ஒருத்தியை நினைத்த வண்ணம் இருக்கிறேன், அவள் என் வாழ்க்கைத் துணைவியாக வர என்ன செய்ய வேண்டும்?

ப: திருமணம் செய்து கொள்ள வேண்டும்!

ஃ

ஓ. கே. கண்ணையா,

கே: நாங்கள் வரக்காப்பொளையில் தி. மு. க. அமைக்கத் திட்டமிட்டு இருக்கிறேம் இதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்குமா?

ப: இதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை.

ஃ

எஸ். கமலா,
புதூர்

கே: இந்நாட்டில் செய்வினை சூனியம் என்றெல்லாம் செய்கிருர்களே சிலர் இதனுல் இவர்களுக்கு ஏதாவது நன்மை உண்டா?

ப: இதனுல் செய்விக்கிறவர்களுக்கு கை நஷ்டம் செய்யப்படுகிறவர்களுக்கு இலாபமோ நஷ்டமோ கிடையாது. செய்கிறவர்களுக்கு இலாபம்!

ஃ

இ. தமிழ் அரசன்,
உருத்திரபுரம்

கே: எம். ஜி. ஆர். அவர்களுக்கு அளித்த வரவேற்பைப் போல் எஸ். எஸ். ஆர். இலங்கைக்கு வந்தால் அவர்களுக்கும் அளிப்பார்களா?

ப: சந்தேகமேன்? கலைஞர்களை வரவேற்பதில் என்றும் சோடை போனவர்களல்ல இலங்கையிலுள்ள தமிழ் மக்கள்.

ஃ

முஹம்மது பௌஸி,
கொழும்பு-12

கே: ஆட்சிக்கு வந்தால் வாழ்க்கைச் செலவை குறைப்போம் என குரல் எழுப்பிய தேசிய அரசாங்கத்தின் காலமிதில் ஓர் இறுத்தல் உருளைக் கிழங்கு 1-25 சதமாக மாறியுள்ளது இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: கப்பலை எதிர்பார்த்து உயிர் வாழும் மனிதர் கூட்டந்தான் இலங்கையர்! உருளைக் கிழங்கு கொண்டுவரும் கப்பல் அடிக்கடி வந்தால் விலை குறையும் வராவிட்டால், அல்லது தாமதமானல் விலை கூடும். இதற்கு கப்பலைத்தான் குறை கூற வேண்டும்.

ஃ

"இளமதி",
ஹெம்மாதகம

கே: மனிதன் தனது சுய குணத்தை எப்போது காட்டுவான்?

ப: பிடிவாதம் பிடிக்கும் போது மனிதன் சுய குணத்தை (மூதாதையர் குணத்தைத்) தெளிவாகக் காட்டுவான்.

ஃ

செல்வம்,
கோப்பாய்

கே: சிலர் ஓய்வு பெற்று பென்ஷன் எடுத்துக் கொண்டும் பின் வேலை பார்க்க விரும்புகிருர்களே எதற்காக?

ப: பழக்க தோஷம்! வாழ்க்கை முழுவதும் வேலையே செய்து பழகிப் போனதால், வயோதிக காலத்திலும் அவர்களால் ஓய்வு எடுக்க முடிகிறதில்லை.

ஃ

எஸ், எம். சுந்தரலிங்கம்,
மடுல்சீமா

கே: திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிருர்கள்?

ப: அன்பளிப்பு எனக் கூறப்படும் ஒரு கார் பற்றிய விவகாரம் பாராளுமன்ற செலக் கமிட்டியொன்றின் விசாரணைக்கு வரவிருப்பதால், கமிட்டிக்குச் சமர்ப்பிப்பதற்காக அது பற்றிய விபரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிருராம்.

ஃ

கா. சுப்பிரமணியம்,
தமிழககொல்லை

கே: தமிழ்த் தினசரிகள் இரண்டு சிங்களவர்கையில் இருப்பதால் தமிழருடைய உண்மையான கருத்துகளைக் கூறுவதற்காக சுதந்திரனைத் தினசரி இதழாக வெளியிட்டால் என்ன?

ப: வெளியிடலாம்! மற்ருெரு தினசரியின் பளுவைத் தாங்கும் அளவுக்குத் தமிழ்ப் பேசும் மக்களின் கை வலுவுடையதாக இருக்கிறதா என்ற கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லையே.

ஃ

எம். செபஸ்டியன்,
இறக்குவானை

கே: அடுத்த தேர்தலில் சிறிமாவோ அதிக ஆசனங்களைக் கைப்பற்றினுல் தமிழரின் கதி என்னவாகும்?

ப: அவர்கள் 1960-ல் இருந்த இடத்துக்கே மீண்டும் திரும்பிப் போய் விடுவார்கள்.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

கே. ஆர். விஸ்வய்யா,
லினுகல

கே: அடுத்த பொதுத் தேர்தலுக்குமுன் மலையக மக்களுடைய நாடற்ற பிரச்சினையைத் தேசிய அரசாங்கம் தீர்த்து வைத்துவிடுமா?

ப: முற்ருகத் தீர்க்க முடியாது. ஆனல் ஒரு தீர்வு அமுலுக்கு வரும். சிறிமா—சாத்திரி ஒப்பந்தப்படி பார்த்தாலும் பிரச்சினை தீர 15 வருடங்களாகுமே!

ஃ

எம். ரட்னம்,
சின்னநாகவத்தை

கே: ஐ. தொ. கா. தலைவர் தோட்ட தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி 17.50 1966 ஜனவரி முதல் வாங்கித் தருவேன் என்று வீர முழக்கம் செய்கின்ருரே. இவர் உண்மையில் வாங்கித்தருவாரா?

ப: இன்றைய நிலையில் முடியாது. இன்னும் சில காலத்துக்கு அவர் தொடர்ந்து முழங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

ஃ

இ. இராசையா,
பலாங்கொடை

கே: தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் என்னும் கூற்று சொல்லளவிலா அல்லது செயலளவில் நடக்குமா?

ப: இது ஒரு நீண்ட காலக் கிளர்ச்சி! தேசியக் கல்வித் திட்டத்தில் தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் அம்சமும் அடங்கியிருக்குமென எதிர்பார்க்கிறேன். அது எப்பொழுது வருமென்பதற்குத் தற்போது உத்தரவாதம் எதுவுமில்லை.

சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: வெளியூர் பாடசாலை தமிழ்ப் பிரிவுகள் மூடப்படும் படலம் தேசிய அரசிலும் தொடர்ந்து அமுல் நடத்தப் படுகிறதே இதன் நோக்கமென்ன?

ப: பழைய கொள்கை தொடருகிறது. அதனைத் தடுத்து புதிய கொள்கை உருவாக்க இப்பொழுது முயற்சி செய்யப்படுகிறது.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணர்பண்ணை

கே: அமைச்சர் திருச்செல்வத்தின் வவுனியாச் சுற்றுப் பிரயாணத்தின் போது திரு. சிவசிதம்பரமும், கலந்துகொண்டதையிட்டு; இங்குள்ள 'த கா.' வினர் ஏதோவெல்லாம் கூறுகின்ருர்களே?

ப: ஒரு பிரதிநிதி தனது தொகுதிக்கு விஜயம் செய்யும் அமைச்சர் எந்த கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் அவருடைய சுற்றுப் பிரயாணத்தில் கலந்துகொள்ளுவது நியாயமே. பரந்த அரசியல் அறிவு இருந்தாலன்றி த. க. வினர் இதை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?

ஃ

செல்வி இலட்சுமி,
கொழும்பு

கே: பெண்களின் அறிவை எதைக்கொண்டு அளப்பது?

ப: 'அரிது அரிது அரிவையர் அறிவை அளப்பது' என்று இருபதாம் நூற்ருண்டின் ஒளவையார் ஒருவர் பாடியிருப்பதை நீர் அறியீரோ?


# எச்சரிக்கை

## இந்த அறிவித்தல்

## பொது மக்களின் நலனை முன்னிட்டு வெளியிடப்படுகிறது

எமது ஏஜென்டு அல்லது விற்பனைப் பிரதிநிதி என உரிமை பாராட்டும் எவரிடமும் எமது கையொப்பம் தாங்கிய அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்கும்படி பொது மக்களை வேண்டிக் கொள்கிருேம். அடையாள அட்டையைக் காண்பிக்கத்தக்க நிலையிலிருக்கும் விற்பனைப் பிரதிநிதிகள் மாத்திரமே ஓடர்கள் பதிவு செய்து கொழும்பிலுள்ள எமது கவனத்துக்கு அனுப்பி வைக்கும் அங்கீகாரம் பெற்றவர்களாவர். அங்கீகாரமின்றி எமது சார்பில் செயலாற்றுவதாக உரிமை கொண்டாடும் எவரும் பொய் வேடம் புனைந்து ஏமாற்றுபவராகவே இருப்பர்.

பொது மக்களின் நலனை உத்தேசித்தே இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்றது. ஏனெனில் யாரோ ஒருவர் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள வியாபாரிகளையும் விற்பனையாளர்களையும், சந்தித்து தாம் இந்தக் கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதி என்று சொல்லி ஆள் மாருட்டம் செய்ததுமல்லாமல், இக் கம்பனியின் ஏஜென்டுகளாக அல்லது உப-ஏஜென்டுகளாகப் பிறரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் கம்பனியின் அங்கீகாரம் பெற்ற விற்பனைப் பிரதிநிதிகளுக்குக் கூட இத்தகைய நியமனங்கள் செய்வதற்கு அனுமதி கிடையாது. சன்டோ ரொக்ஸ், இன் ரொக்ஸ் 8, எகா ரொக்ஸ் ஆதியன போன்ற எமது விவசாய ரசாயனப் பொருள்களை தமது சொந்த வாகனத்தை உபயோகித்து கொள்ளை லாப விலைக்கு வியாபாரிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் இந்த நபர் விற்பனை செய்துமிருக்கிருர். கல்முனை, வவுனியா, உயிலங்குளம், ஜாஎல, அளவெட்டி, கெபிட்டி கொல்லவ செங்கலடி, புத்தள, அச்சுவேலி, பொத்துவில், செம்பியந்தலாவ பொலனறுவை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள விற்பனையாளர்கள் இந்த ஆள் மாருட்ட நடவடிக்கை பற்றி எமக்கு முறைப்பட்டிருக்கிருர்கள்.

மேற்குறித்த வகையில் எவராவது செயலாற்ற முற்படும் சமயங்களிலெல்லாம் அன்னரின் பெயர், விலாசம் முதலிய விவரங்களைப் பெற்று, எமக்கு அனுப்பி வைக்கும்படி பொது மக்களைக் கேட்டுக்கொள்கிருேம்.

தற்சமயம் இலங்கையின் எந்தப் பாகத்திலேனும் எமது விவசாய ரசாயனப் பொருள்கள் வான்களில் விநியோகிக்கப்படுவதில்லை; அங்கீகாரம் பெற்ற எமது விற்பனைப் பிரதிநிதிகள் எவரும் ரொக்கப் பணத்துக்குக் கொடுக்கவென்று எந்த வகை விவசாய ரசாயனப் பொருளையும் கொண்டு செல்வதுமில்லை. அவர்கள், ஓடர்களைப் பதிவு செய்து எமக்கு அனுப்பி வைக்க, நாம் கொழும்பிலிருந்து பொருள்களை அனுப்புவோம்.

விவசாய ரசாயனப் பொருள்கள் உரவகைகள், மற்றும் பொருள்கள், சம்பந்தமான வர்த்தக விசாரணைகள் யாவும் எமக்கு நேரடியாகவே, அங்கீகாரம் பெற்ற, எமது விற்பனைப் பிரதிநிதிகள் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

## ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

பரந்துபட்ட வகையான விவசாய ரசாயனப் பொருள்கள், கிருமிநாசனிகள், காளான் நாசனிகள், தெளிகருவிகள், தூவு கருவிகள், உரவகைகள் ஆகியவற்றை அதிசிக்கனமான விலைக்குப் பெறக்கூடிய ஸ்தாபனம்.

**5, மேல் சதாம் வீதி, த. பெ. 11, கொழும்பு.**

# தேசிய அரசின் கீழ் இழந்த உரிமைகளைப் பெறுவது நிச்சயம்

## இ. தொ. கழக மாநாட்டில் தலைவர் நடராசா நம்பிக்கை

'பார்வையாளராக வந்த என்னை நீங்களனைவரும் ஒன்று சேர்ந்து கழகத்தின் தலைவராகத் தெரிவு செய்து என்மேல் பெரும் பொறுப்பைச் சுமத்திவிட்டீர்கள். நான் ஒரு மூதவை உறுப்பினன் என்ற முறையிலன்றி உங்கள் தொண்டன் என்ற உரிமையுடன் பணிபுரிவதையே விரும்புகிறேன். இந்த நாட்டிலுள்ள தமிழ் சமூகத்திற்கு அளவிறந்த துன்பங்களும் இடர்ப்பாடுகளும் உள்ளன. பத்து இலட்சம் மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்களினதும் இழந்த உரிமைகளைத் தேசிய அரசாங்கம் வழங்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அந்த நம்பிக்கையுடனேயே நாம் தேசிய அரசாங்கத்தை உருவாக்கவும் முன் வந்தோம்' என்று இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நடப்பு வருடத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா தமது தலைமையுரியை நிகழ்த்துகையில் கூறினர்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இரண்டாவது மாநாடு அட்டன் நகரில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களிலும் அமைதியான முறையில் நடைபெற்றது. ஆடம்பரமற்ற முறையில் மாநாட்டை நடாத்துவதென்று கழக நிர்வாகிகள் முடிவெடுத்திருந்த போதும், அட்டன் நகர மக்கள் வீதியெங்கும் மூவர்ணக் கொடிகளை ஏற்றி நகரை ஆடம்பரமான முறையில் அலங்கரித்து கழகத்தலைவர்களை வரவேற்கத்தவறவில்லை. கழகத்தின் நடப்பு ஆண்டுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. சு. நடராசா அவர்கள் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:



'தோட்டத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் மிகப்பல. ஆனல் கல்விப் பிரச்சினையே இவற்றில் பெரும் பிரச்சினையும் முக்கியமானதுமாகும். எனது இருபது வருடப் பொது வாழ்விலிருந்து நான் கண்ட பெரும் உண்மை ஒன்று உண்டு. தமிழ் மக்கள் கல்விக்காக எதையும் தியாகம் செய்வார்கள். இன்று நான் பெற்றிருக்கும் பதவியின் மூலம் மலைநாட்டு மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உழைக்க உறுதி பூண்டுள்ளேன்.

'தோட்டத் தமிழர்கள் கல்வியறிவு பெற்று விட்டால் பிரச்சினைகள் சுமுக



மாகத்தீர்ந்துவிடும். அன்று இவர்கள் கல்வியறிவுடையவர்களாக மட்டும் இருந்திருந்தால் இன்றைய பிரச்சினைகள் தோன்றியிருக்க மாட்டாது என்பது திண்ணம்.

'தோட்டங்களிலே மருத்துவமனை வசதிகளும் கல்விக்கூடவசதிகளும் மிக அவசியமாகும். இதை ஏனையவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை,

'தோட்டத் தமிழர்களுக்கு குடியுரிமை வாக்குரிமை மறுக்கப்பட்டதன் மீதுதான் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோன்றியது. தோட்டத் தொழிலாளர்களது அடிப்படை உரிமைகள் பற்றி நன்கு சிந்தித்த பின்னரே இ. தொ. கழகத்தை தமிழரசுக் கட்சி தோற்றுவித்தது. உலகில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் இனத்தின் பெயரால் ஒன்றுபட்டிருக்க வேண்டும். இந்த உண்மையை நாம் உணர்ந்தால் எமது சக்தியை மாற்றாரும் நிச்சயம் உணர்வார்கள்.'

### தந்தை பேச்சு

தமிழரசுத் தந்தை திரு: சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

'இந்நாடு சுதந்திரமடைவதற்கு முன், இங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் சகல உரிமைகளுடனும் வாழ்க்கை நடாத்தினர்கள். சுதந்திரத்திற்குப் பின்பே தொழிலாளர்கள் தம் பொருளாதார, கல்வி, மனித உரிமைகளை இழந்தனர். இவ்வுரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுப்பதென நாம் கங்கணம் கட்டியுள்ளோம்.

''தமிழ் தொழிலாளர்கள் இந்நாட்டையே தாயகமாகக் கொண்டு பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்குவதில் எத்தகைய தவறுமில்லை.''



### பொதுச் செயலாளர் பேச்சு

அடுத்து தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் இ. தொ. கழகத் துணைத் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பேசுகையில் கூறியதாவது:

'இன்றைய அரசியற் சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி மிக முக்கிய இடத்தை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. இ. தொ. கழகத்தின் தலைமையின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் நேரிய வழியில் இட்டுச் செல்லப்படுவர் என்பது திண்ணம். தமிழரசுக் கட்சி என்றும் இனவதக் கூச்சலுக்கு இடம் கொடுத்ததில்லை. மாருக அங்ஙனம் கூச்சல் எழுப்புபவர்களைப் பகிரங்கமாகக் கண்டித்து வந்துள்ளது. இந்த உண்மையை யாரும் மறந்துவிடக் கூடாது.

'தமிழரசுக் கட்சி தமிழினத்தின் உரிமைகளைப் பாதுகாக்க என்றும் தவறமாட்டாது. ஏனையவர்களைப் போன்று சுயநல நோக்கத்துடன் நாம் எமது பாதையை மாற்றமாட்டோம். இதை

மலை நாடு

மலையகத் தமிழ் மக்கள் உணர்ந்திருப்பது மகிழ்ச்சியாகும்'

### தலைவர் பேச்சு

அடுத்து நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் இ. மூ. வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது:

'எங்கள் கழகம் தோட்டத் தொழிலாளருக்குச் சிறந்த சேவை செய்து வருகிறது. தோட்டத் தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே மலையகத்தில் நாம் ஓர் தொழிற் சங்கத்தை அமைத்தோம்.

'தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை மக்களாகவே வாழவேண்டும். தோட்டத் தொழிலாளரின் உழைப்பால் தான் இலங்கை முன்னேற்றமடைந்திருக்கிறது. மனித உரிமைகளைத் பெறுவதற்குத் தோட்டத் தொழிலாளர் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும். ஒற்றுமை இல்லாவிடின் ஒன்றையும் சாதிக்க முடியாது.

### அமைச்சர் பேச்சு

அடுத்து உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் பேசுகையில் கூறியதாவது:-

'பாராளுமன்றத்திலும் மூதவையிலும் பிரதிநிதித்து



வம் வகிக்க தோட்டத் தொழிலாளர்களுக்குப் பூரண உரிமையுண்டு. பண்டைக் காலத்தில் தோட்டத் தொழிலாளரின் பிரச்சினைகள் தோட்டத்துரைமாரால் அரசாங்க அதிபர்கள்மூலமாகவே பாராளுமன்றத்தில் பிரத்தாபிக்கப்பட்டன. அவ்வாறு தோட்டத் தொழிலாளர் அடிமைகளாயும் இருந்த காலம் இப்போது மாறிவிட்டது. தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதில் தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஒத்துழைத்துள்ளன. அதன் பலனுக இன்று தமிழ் சமூகத்தைச் சேர்ந்த மொத்தம் 20 எம். பீக்களும் ஐந்து செனட்டர்களும் தேசிய அரசில் உள்ளனர். ஆகவே தேசிய அரசாங்க முன்னேற்றத்திற்கு உதவுவது நம் நீங்காக் கடமையாகும். தமிழ்ப்பேசும் மக்கள் அனைவரையும் ஒன்ருக்கவே தமிழரசுக் கட்சி தோட்டப்பகுதிகளிலும் அடியெடுத்து வைத்தது.'

### சேர்: பொன். இராமநாதன்

1930 ஆண்டுவரை ஈழத்து அரசியல்வானில் சுடர் விளக்காய் விளங்கிய பெருந்தலைவர் சேர். பொன். இராமநாதன் அவர்களின் அரசியல் வாழ்வு பற்றிய ஆய்வுக் கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

அரசியல் வரலாற்றுக் கட்டுரைகளையும், பெரியார்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதுவதில் தனி வழி வகுத்த ஈழவேந்தன்' அவர்களே இக் கட்டுரைத் தொடரையும் எழுதுகிறர்.

உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்!


## மினர்வா

இப்பொழுது

இலகுவான தவணைக் கட்டண அடிப்படையில் உங்களுக்கு வழங்கப்படுகிறது.




★ நிலையான எழில், அற்புதமான கிரியாம்சை
★ அச்சொட்டான அமைப்பு,
★ 3 லாச்சு கொண்ட கபினெட்

இடைக்குமிடங்கள்:

குருண்டிக் காட்சிச்சாலை

வை. எம். பி. ஏ. கட்டிடம்,
கோட்டை, கொழும்பு.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,

516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு.

தொலைபேசி: 4261, 4262, 4263.

# "ஒப்பந்தத்திற்கு" மல்வத்த, அஸ்கிரி மகாநாயக்க தேரோக்கள் எதிர்ப்பு

—————o—————

## 'ஜனசத்திய' வெளியிட்டுள்ள அறிக்கைகள்

"யூ. என். பி தமிழரசு இரகசிய ஒப்பந்தம் இலங்கையின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் சிங்களவருக்குள்ள உரிமையைப் பறிக்கும் பயங்கரமான ஒப்பந்தமாகும். திருமதி சிறிமாவோவின் ஆட்சி காலத்தில் இப்படி எதுவும் நடைபெறவில்லை. நல்லவர்களென நினைத்து நாங்கள் ஆதரவளித்த கோஷ்டியினர் இப்பொழுது பார்த்தால் மிக மிக மோசமானவர்களாகிவிட்டனர்'' என்று மல்வத்தை மகா நாயக்க அமுனுகம ராஜகுரு ஸ்ரீ விபஸ்ஸி தேரோ 'ஜனசத்திய' பத்திரிகைக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறுகிறார்.'' என்று 'ஜனசத்திய' (21-11-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

"மகாநாயக்க தேரோ மேலும் கூறுவதாவது:—

கண்டி நகரில் நடைபெறும் சம்பவங்களிலிருந்தே இந்த ஒப்பந்தம் உண்மையானது என்பது நிருபணமாகியுள்ளது. கண்டி சுகாதாரப் பகுதி அதிபர் பதவிக்கு மலைநாட்டைச் சேர்ந்த ஒரு சிங்கள பௌத்தரை நியமிக்கும்படி மகா சங்கம் கேட்டுக் கொண்டது. ஆனால் ஒரு தமிழ் கத்தோலிக்கர்தான் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். இதுவே ஒப்பந்தம் உண்மையான தென்பதை எடுத்துக் காட்டுகிறது.

வவுனியாவில் 23 கிராமங்கள் முற்றிலும் தமிழர்கள் கைக்குப் போய்விட்டதாக அறிகின்றோம். அதற்கு முழு முதற்காரணம் வவுனியா அரசாங்க அதிபரும், பொலிஸ் அதிகாரியும் தமிழர்களாயிருப்பதுதான்.

இது மட்டுமின்றி, அனுராதபுரம், மாத்தளை, கெகிராவ, கண்டி ஆகிய நகரங்களைத் தமிழர்கள் ஏற்கனவே விழுங்கிவிட்டனர். கம்பளையிலும், சுற்றுப்புறங்களிலும் பெரிய தோட்டங்கள் தமிழர்களுக்குச் சொந்தமாகியுள்ளன. இம்மாதிரி இன்னும் மூன்று மாதங்களுக்கு நடைபெற்றால் முழு இலங்கையும் இந்தியாவுக்கு அடிமையாகிவிடும்.

களுத்துறையில் சிங்களவர் ஒருவர் சிங்களத்தில் கோரிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தமிழில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. 'ஜனதின' ஏடு இல்லாவிட்டால் இச் செய்திகளெல்லாம் வெளிவராது மூடப்பட்டுவிடும்

அஸ்கிரி மகாவிஹார பரிவெனதிபதி பண்டித சால்யாலே ஸ்ரீ சுமன திஸ்ச நாயக்கதேரோ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடுவதாவது:— இந்த ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாகிவிடுமாதலின், இலங்கை முழுவதும் அமுல் செய்ய வேண்டிய சிங்களம் மட்டும் சட்டம் இரத்தாகிவிடும். இலங்கை இரு கூருகப் பிரிவதும் திண்ணம். இத்தகைய நிலைமை உருவாகியிருக்கும் போதும் சிங்களம் மட்டும் சட்டத்தில் ஓர் எழுத்துக்கூட மாற்றப்படமாட்டாது என்று பொறுப்புள்ளவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டதேன்?''

இத்தகைய ஒப்பந்தம் இருக்கிறதென்று எதிர்க் கட்சியினர் பன்முறை கூறியிருந்தும் இதுவரை அதை மக்களிடமிருந்து மறைத்து வைத்ததேன்? இந்த ஒப்பந்தம் உண்மையானதாக இருக்கும் பட்சத்தில் சிங்கள பௌத்தர்களின் எதிர்காலம் இருண்டு விடுமென்பதில் ஐயமில்லை.'

——

### ஜனதின மீது பாணம்?

"டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தத்தை'' ஜனதின வெளியிட்டதின் விளைவாக முற்போக்குப் பத்திரிகைகளை நசுக்கும் முயற்சியில் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

அரசாங்கத்தின் இரகசியங்கள் இவ்வாறு மக்களுக்கு அம்பலப்படுத்த இடமளித்தால், தங்களுக்கு நாட்டு மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலைமை ஏற்படுமென ஐ. தே. கட்சி நிர்வாகக் குழு கூட்டத்தில் அநேக உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர். அக் கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் ஜனதின உட்பட இடதுசாரிப் பத்திரிகைகளை வகுப்புவாதத்தைத் தூண்டுகின்றன என்ற போர்வையில் தடை செய்ய வேண்டும் அல்லது வாய்ப்பூட்டு போட வேண்டுமென வற்புறுத்தினர்.

அவ்வாறு செய்வது சாத்தியமில்லையேல், அப்பத்திரிகைகளுக்கு வழங்கியுள்ள கடுதாசிக் கோட்டாவைக் குறைப்பது போன்ற நடவடிக்கைகளின் மூலம் அவற்றைக் குற்றுயிராக்க வேண்டுமென சில கமிட்டி உறுப்பினர்கள் யோசனை கூறினர்''

—ஜன தின (24-11-65)

### தமிழில் பஸ் டிக்கட்

'டட்லி—செல்வநாயகம் ஒப்பந்தம் மிக நுட்பமான முறையில் அமுல் நடத்தப்படுகிறது.

இப்போதெல்லாம் சில பஸ்களில் பிரயாணச் சீட்டுகள் தமிழிலேயே எழுதப்படுகின்றன. இப்படி எழுதுவது தமிழ் மக்கள் வசிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலல்ல. பெரும்பாலும் சிங்களம் பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தான் இது நடைபெறுகிறது.

பிரயாணச் சீட்டின் படம் இங்கு காணப்படுகிறது. இச் சீட்டு 13-11-65ந் திகதி காலையில் கொழும்பிலிருந்து குருணைக்கல்லுக்குப் புறப்பட்டுச் சென்ற பஸ்ஸின் கண்டக்டர் தமிழில் எழுதியதாகும்' (சீட்டின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

—ஜனமத்தய (19-11-65)

### தமிழ் அரசாங்க அதிபர்கள்

யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் பணியாற்றும் சிங்கள அரசாங்க அதிபர்களை இடமாற்றம் செய்து அவர்களுக்குப் பதிலாகத் தமிழ் அரசாங்க அதிபர்களை நியமனம் செய்வதற்காகத் தமிழரசுக் கட்சி முயற்சி செய்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழரசு நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

இவ்விரு மாகாணங்களுக்கும் தமிழ் அரசாங்க அதிபர்களை நியமிக்கும்படி நேரடியாகக் கோரினால், அதனால் சிங்கள மாகாணங்களில் பணியாற்றும் தமிழ் அதிகாரிகளை இடமாற்றம் செய்யும்படி சிங்களவர்கள் கோருவதற்கு இடம் ஏற்படுமாதலின் தமிழ் அரசாங்க அதிபர்களை நியமிக்கும்படி கேட்காமல், தமிழ்த் தெரிந்த அதிகாரிகளை யாழ்ப்பாணம், திருமலை அரசாங்க அதிபர்களாக நியமிக்கும்படி கோருவதெனத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. சனவரியில் நடைபெறவிருக்கும் கட்சி மாநாட்டுக்கு முன்பு இவ்விரு மாகாணங்களில் தமிழ் அரசாங்க அதிபர்களை நியமிக்க முடியுமென கட்சி எதிர்பார்க்கிறது.''

ஜனதின (24-11-65)

### தமிழரசாரின் கோபம்

'தமிழ் வகுப்புகளை மூடிவிட்டதைப் பற்றி ஒரு கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதுபற்றி தமிழரசுக் கட்சிக்குக் கடுங் கோபம். காரணம் தற்போது வெளியாகியுள்ள டட்லி—செல்வநாயகம் ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு தமிழனும் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ள அனுமதித்திருக்கும் போது இவ்வாறு செய்திருப்பதுதான். இப்பிரச்சினை மேலும் சூடுபிடிக்குமானால் வகுப்புக் கலவரங்கள் தோன்ற இடமேற்படக்கூடும்'

—சிங்களே (21-11-65)

## மல்வத்த, சிங்கள இதழ்களில்...

## ஜனநாயகத்தைக் காக்கவே சேர்ந்தனர்

'தேசிய அரசாங்கம் நிறுவப்படும் போது தமிழரசுக் கட்சிவிடுத்த ஒரே அறிக்கை ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தேசிய அரசாங்கம் அமைக்க உதவுகிறோம் என்பதே-திரு. டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சிக்குக் கொடுத்துள்ள ஒரே வாக்குறுதி தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என்பதே.' இவ்வாறு 'லங்காதீப்ப' (20-11-65) எழுதியுள்ள அரசியல் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

'அரசாங்கத் தலைவரும் தமிழரசுக் கட்சியும் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாக எதிர்க் கட்சியினர் பிரசாரம் செய்கின்றனர். இது பற்றி பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அப்படி ஓர் ஒப்பந்தம் இருக்குமானால், அதுபற்றி பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்காமல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

சம அந்தஸ்து கொடுப்பதற்காக முயற்சி செய்து மூக்கு உடைபட்ட மார்க்சீய வாதிகளின் இந்தப் பொய்ப் பிரசாரம் இம் முறையும் அம்பலமாகியுள்ளது. மொரிஸ் ஒக்ஸ்போர்ட் கார் பற்றிய விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறவிருந்த தினத்துக்கு முதல் நாள் பொதுமக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்காக இக் கட்டுக் கதையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். மார்க்சீய வாதிகள் இம்முறையும் தவறிவிட்டனர்' என்று லங்காதீப்ப அரசியல் நிருபர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை''
விரும்புவது "மாய ஜோதி'' ஊது பத்திகளே!
ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14, டாம் வீதி, கொழும்பு-12.



# மங்கையர் சங்கம்

கருத்துமேடை

## மறைப்பதாலே தான் ஆபத்து அதிகரிக்கிறது

—செல்வி மஸ்கூதா பேக்கம்—

சமீப காலத்தில் சுதந்திரனிலே ஆரம்பமான 'ஆபாசப்படங்கள் ஆபத்தானதா?' என்ற பகுதியில், ஆபாசப்படங்கள் ஆபத்தானதுதான் என்ற முடிவுக்கே எல்லோரும் வந்து விட்டார்கள். இது ஒரு வகையில் உண்மைதான். அறையிலே நடப்பதை அம்பலத்தில் காட்டினுல் அது ஆபாசம் தான். ஆனுல் நாம் நம்மை சிந்தித்துக் கொண்டால் ஆபத்தல்ல என்றும் விளங்குகிறது.

காட்சிகளிலே வரும் நிறுவன உருவங்களைக் கலைக்கண்ணுேடு பார்க்கும் போது அது ஆபத்தாகாது. அதே உருவததைக் காமக்கண்ணுேடு நோக்கும் போது அது ஆபாசமாகிறது. நிறுவன உருவம் எல்லாவற்றையும் ஆபாசமாகக் கொண்டால்நாமே நமக்குஆபாசம், நம் உறவினர் நமக்த ஆபாசம், உடுக்க இயலாத பிச்சைக்காரர்கள் கூட ஆபாசமும். ஆபத்தானவர்களும் தான்.

தமிழ்ப்படங்களிலே முத்தக்காட்சிகளைப் படமாக்க மாட்டார்கள். முத்தமிடும் காட்சியாகவே படம்பிடிக்க வேண்டுமானுல், முத்தமிடும் சைகைகளைக்காட்டி, இதழ்கள் ஒன்று சேரும் தறுவாயில் மறைத்துவிடுவார்கள் இதேபோல ஒரு காட்சியைக் கொண்ட படம் 'புதிய பறவை' இதில் 'சிட்டுக்குருவி முத்தம்கொடுத்து' என்ற பாடலுக்கு கதாநாயகனும், கதாநாயகியும் முத்தம கொடுக்க வேண்டியதாக ஒரு கட்டம் வருகிறது. ஆனுல் இதழ்கள் ஒன்று சேரும் இககட்டான கட்டத்தில் வேறு எதையோ கொண்டு மறைக்கிருர்கள்.

இந்தக் காட்சியை நாம் எடுத்துக்கொண்டால் நாயகனும், நாயகியும் ஆடிப்பாடி உலாவுகிருர்கள். தனிமையானகையால் உணர்ச்சிவசப்பட்ட இவர்கள் எதையோ செய்ய முற்படுகிருர்கள் என்றே நமக்குப்படுகிறது.

நாம் சினிமா பார்க்கும் போது, நமது உள்ளமும் சினிமாவோடு ஒன்றித்துவிடுவது வழக்கம். இதே போல காதல் காட்சிகளிலும் ஒன்றிக்கத்தானே செய்யும்? நாயகனும், நாயகியும் நெருங்கி, ஆடிபோடி விளையாடி, நமது உணர்ச்சியையும்எங்கோகொண்டுபோய், இதழ்கள் ஒன்று சேரும் பட்சத்தில், அதைமறைப்பதால் மட்டும் அது ஆபாசம் இல்லாமலாகிவிடுமா? இது மட்டும் ஆபாசமானுல், உணர்ச்சியைத் தூண்டும் காதல் காட்சிகளும் ஆபாசம் தானே?

இப்படிக் காட்சிகளைப் பார்த்த நமக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடுகின்றதா என நாம் சிந்தித்து ஆபாசம் என்பதையறிய வேண்டும். அறையிலே நடப்பதை, கடைத்தெரு சந்தைகளிலே காட்டினுல் அது ஆபாசம்தான். இதையே ஆபாசமாகவும், ஆபத்தாகவும் கொள்ள முடியும்?

மேலே கூறிய 'புதிய பறவை' முத்தக்காட்சியிலே,

### திரையிலும் சுவரிலும் ஆபாசம் [7]

முத்தம் கொடுக்கும் சைகைகளைக்காட்டி, ஒன்றுசேர்ந்து எதையோ செய்யும் விதத்தை மறைத்து, திருப்பகாட்டும் போது இருவரும் தங்கள் இதழ்களைத் துடைக்கிருர்கள். படம்பார்த்துக் கொண்டிருந்த வாலிப-குமரப்பருவத்தினருக்கு......!

ஏன் இந்தக் காட்சியை மறைக்கிருர்கள்? மறைத்த போது என்ன செய்கிருர்கள்? பின்னர் ஏன் இதழ்களைத் துடைக்கிருர்கள்? என்ற பல விஞக்கள் எழும்புகின்றன. இப்படி அல்லல் பட்ட மனம் இதையே சிந்திக்கும் போது, முடிவு காணுத பட்சத்தில், மனம் பல மற்றவர்கள் பைத்தியமாகிருர்கள். மனம் பல மானவர்கள் நாம் இதழ்களை ஒன்று சேர்த்துப் பார்ப்போம் என்று பலாத்காரத்தைப் பிரயோகிக்கிருர்கள். இதை நாம் சிந்தித்தால் ஆபத்து எது என்பது விழங்கும் என்பது திண்ணம்.

ஆங்கிலப் படங்களில் காதலனும், காதலியும் எவ்வளவு ஆடிப்பாடி உணர்ச்சியை எங்குதான் கொண்டு சென்ருலும், அந்த உணர்ச்சி அந்த காட்சியில் தீர்ந்து விடுகிறது. ஏனெனில்தமிழ்ப் படங்களில் இதழ்கள் சேரும் போது மறைப்பதைப்போல, அவர்களும் மறைக்காமல், அந்த இதழ்கள் ஒன்று சேர்ந்தால் என்னதான் செய்யும் என்பதையுமே காட்டிவிடுகிருர்கள்! இதனுல் தான் உணர்ச்சி அதே சாட்சியில் தீர்ந்துவிடும் என்கின்றேன். தமிழ் ஆங்கிலப் படங்களை சிந்தித்துக் கொண்டால் மறைப்பதால் ஏற்படும் ஆபதது, நேராகவே காட்டிவிடுவதால் ஏற்படாது என்பது விளங்கும்.

முத்தமிடுவது ஆபாசமாக இருந்தால், 'நெஞ்சம் மறப்பதில்லை' என்ற படததில் தேவிகாவுடைய கன்னத்தில், கல்யாணகுமாருடைய இதழ்கள் உராயும் போது, அதையாரும் ஆபாசம்என்று சொல்ல முடிகிறதா? கன்னமும், இதழும் உராயும் போது ஆபாசமானுல்மேலே கூறிய இந்தச் சோகக் காட்சியும் ஆபாசம்தான். எனவே காட்சிக்குத் தகுந்தது போல் எதைக் காட்டினுலும், அது ஆபாசமானுலும், ஆபத்து அல்ல என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

எனவே ஆபாசத்தை மறைத்து வைப்பதால்தான் பைத்தியத்தனம், பலாத்காரம் போன்ற ஆபத்து ஏற்படுகிறது என்று சொல்ல முடிகிறது. அதுவல்லாமல் வெளிப்படையாக எதையும் காட்டும் போது ஆபாசம் தனித்து, ஆபத்தும் தடைப்படுகிறது என்ற முடிவுக்கு நாம் வரமுடிகிறது......!

## ஏன் சிரித்தாள் கருணு?

—'விஜயா'—

நிமிடக் கதை

தடதடவென்று முன் வாயிற் கதவு தட்டப்பட்டது. அகால நேரத்தில் படபடப்புடன் கேட்கும் கதவு தட்டும் சத்தத்திலிருந்து ஏதோ பதட்டப்படத்தக்க சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருணுவின் கருத்துக்கூறியது.

குழந்தை மோகனுவை தொட்டிலில் தூங்க வைத்து விட்டு கணவனின் வருகையை எதிர் பார்த்தவண்ணம் கூடத்திலிருந்து நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது இரவு மணி 11.45 இருக்கும். குழந்தையையும் தன்னையும் இத்தனை நேரம் தனியாக இரவில் விட்டுவிட்டு கிருபாகரன் தாமதித்ததே கிடையாது. நேரமாக ஆக கருணுவின் மனத்திலும் துடிப்பு அதிகரித்துக் கொணடேயிருநதது. அவளுடைய உள்ளத்தின் ஏக்கத்தைப் பிரதிபலிப்பது போல், கதவில் தட்டும் ஒலி இருந்தது.

அவசர அவசரமாகக் கதவைத் திறந்தாள். கிருபாகரனின் முகம் அதிபயங்கரமான தோற்றத்துடன் விளக்கொளியில் தெரிந்தது. வசீகர சக்தி அத்தனையும் கொண்ட அவன் வதனம் வாடிவதங்கி, விபரிக்கமுடியாத வேதனையால் பீடிக்கப் பட்டிருந்தது. எப்போதும் சுறுசுறுப்புடன் தென்படும் அவன் சோர்வடைந்துபோய் நின்ருன். அவனுடைய பரிதாப நிலையைக்கண்ட கருணு ஓடிச் சென்று அவனை அணைத்துக்கொண்டு வந்து கூடத்தில் இருத்தினுள். சில நிமிடங்கள் மட்டும் தான் நாற்காலியில் இருந்தான். அவனுடைய கையிலே இருந்த காகிதக்கட்டை கருணு வாங்கினுள். உடனே சீறிவிழுந்தான் கிருபாகரன். 'தொடாதே அதை' என்று உறுமினுன். கருணு அதிர்ச்சியடைந்து போனுள். அவனுடைய செய்கை இன்று அவளுக்குப் புதுமையாயிருந்தது.

எழுந்தோடிச் சென்று காகிதக் கட்டை அலுமாரியில் வைத்துப் பூட்டினுன். தொப்பென்று போய் கட்டிலில் சாய்ந்தான். சிறிது நேரத்தில் விம்மி விம்மி அழலானுன். செய்வதறியாது கருணு அவனருகில் சிலைபோல நின்ருள். மெதுவாக அவன் அவளை அழைத்தான். 'கருணு நான் பெரிய துரோகம் புரிந்துவிட்டேன். நான் கொலைகாரனுகி விட்டேன் கருணு. எனனேடு வேலை செய்யும் ராஜுவை இன்று கொலை செய்துவிட்டேன். கருணு இன்னும் சிறிது நேரததில் பொலீஸார்வந்து என்னைக் கைது செய்து விடுவார்கள். எனனைத் தூக்கிலே போடுவார்கள். ஐயோ கருணு! ராஜுவை நான் கொன்று, கமலத்தை விதவையாக்கிவிட்டேன். நீ தி என்னைக்கொன்று உன்னை விதவையாக்கப்போகிறதே' என்று சோவெனக் கதறி அழ ஆரம்பித்தான்.

இதுவரையும் அதிர்ச்சியடைந்து போய் நின்ற கருணுவின் முகத்தில்வேதனை தோன்றவில்லை. முறுவலை உதிர்த்தாள். முறுவல் மலர்ந்து பெரும் நகையாகி இறுதியில் அவள் வாய்விட்டே சிரிக்கலானுள். கணவன் கொலை செய்து விட்டதாகக் கூறிக் கண்ணீர் வடித்தான். மனைவியோ வேடிக்கைச் சிரிப்பை உகுத்தாள்.

கருணுவின் சிரிப்புக்குக்காரணம் தெரியுமா?

அடுத்த வாரம் விடைகிடைக்கும்.

## காளையரின் வேலைக்கு கன்னியரின் கடும் போட்டி

காலம் மாறிவருகிறது; காளையருக்கும் கன்னிருக்கும் அதிக வேறுபாடு இல்லாமல் போய்விட்டது. ஒவ்வொரு துறையிலும் ஆண்களுடன் ஆரணங்குகள் 'வரிந்து கட்டிக்கொண்டு' போட்டியிட்டு வருகிருர்கள். அன்று அடுப்பங்கரையில் அடைபட்டுக்கிடந்தனர் மங்கையர்; இன்று அலுவலகத்தில் அமர்ந்து அதிகாரம் செய்கிருர்கள். கத்தியைக் கையினுல் தொடக் கன்னியர் கூசியது, அந்தக் காலம்! கசாப்புக் கடையில் கறியைக் கண்டதுண்டமாக வெட்டித் தருவது இந்தக் காலம்!

தொட்டில் ஆட்டிய கரங்கள்; சரண்டி பிடித்த கைகள், இதெல்லாம் இன்று பழங்கதையாகி வருகின்றன. இயந்திரங்களை இயக்கவும், துப்பாக்கியால் சுடவும் இக்கரங்கள் பழகிவிட்டன. 'அடுப்பங்கரையின் நாற்சுவருக்குள் அடங்கியதே தங்கள் உலகம்' என்று மாதர்கள் நினைத்துக் கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது. இன்று எல்லா துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் போட்டியிட முன் வந்து விட்டார்கள்.

சில ஆண்டுகள் முன்பு வரை, 'கனவிலும் நினைத்திராத' முரட்டுத்தனமான வேலைகளிலும் மேற்கு ஜெர்மன் மங்கையர் இப்போது இறங்கியுள்ளனர். காளையரின் வேலைகளைக் கைப்பற்றிய கன்னியர், தங்கள் திறம் படச் செய்யும் வேலையை மற்றவர்கள் பாராட்டுவதை விரும்புகிருர்கள். ஆனுல் அதே சமயத்தில் நங்கையருககே உரித்தான நளினம்; நாணம் இவற்றைக் கைவிடுவதும் இல்லை; வேலையில் முரட்டுத்தனத்தை வளர்த்துக் கொள்வதில்லை; மேலும் மென்மையை வளர்த்துக் கொள்கிருர்கள்.

மேற்குஜெர்மனியில் எந்த இடத்திற்குப் போனுலும், பெண்கள் வேலை செய்வதைக் காணலாம். வாடகைச் காரில் ஏறினுல், காரோட்டுவது பெண்! ஆங்காங்கு போக்குவரத்தைக் கண்காணித்து, ஒழுங்கு படுத்துவது போலீஸ் பெண்! பெட்ரோல் நிலையத்தில் கார்களுக்கு பெட்ரோல் ஊற்றுவது பெண்! ரயில் வண்டியில் ஏறினுல், அங்கும் பெண் பரிசோதகர்கள்.

இன்று மேற்கு ஜெர்மனியில் பெண்கள் வேலை செய்யாத இடமும் இல்லை; தொழிலும் இல்லை. கடந்த பத்து ஆண்களில் வரைவுப் படம் வரைவோர் 'டிராட்ட்ஸ்மென்' வேலை பார்க்கும்பெண்கள் தொகை 70 மடங்கு அதிகரித்து விட்டது.

தொழில் வரைப்படம் வரைவோர், பல் மருத்துவர்கள், மெக்கானிக்குகள், பாங்கு ஊழியர்கள், இன்சூரன்ஸ் ஏஜண்டுகள் என்று வேலை செய்யும் பெண்கள் ஏராளம், ஏராளம். பொறியியல், விஞ்ஞான ஆராய்ச்சி, சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளையும் ஆக்கிரமிக்க ஆரணங்குகள் தவறவில்லை.

800 மாணவர்களுடன் சேர்ந்து ஷாபர் வாக்னர் என்ற கன்னி, கட்டிடப் பொறியியல் பயின்ருள். தொட்டால் துவளும் பூங்கொடியாள் இங்க்பர்க். பதினெட்டு ஆண்டு கடந்தபருவ மேனியாள். ஆனுல் அவள் கையில் பிடித்தது, கத்தி. பேனுகத்தி அல்ல; கசாப்புக் கடை கத்தி. பன்றியை தன்னந்தனியாக கண்டதுண்டமாக வெட்டி கூறுபோட்டு, அழகிய பொட்டலங்களில் பொதிந்து கொடுத்துவிடுவதில் கைதேர்ந்தவள்.

இக்கட்டழகியின் கைத்திறனைக் கண்டு வியக்காத காளையர் இல்லை. இப்பெண்ணின் ஒரே சகோதரன், சமீபத்தில் ஒரு கார் விபத்தில் உயிரிழந்தான். எனவே பெற்ருேருக்கு மகளாகவும் மகனுகவும் இருக்க வேண்டியவளாகிவிட்டாள். தந்தையின் கசாப்புக்கடையை இனி பொறுப்பேற்று நடத்துவதற்காக, தற்போது தீவிரமாகப் பயிற்சி பெற்று வருகிருள்.

## நீங்களும் நானும்

சகோதரிகளே!

'சில கேள்விகள்' பகுதிக்கு அனுபப்படும் கேள்விகள் பல 'குயுக்தி'ப் பகுதிக்கு ஏற்றவையாகவே வருகின்றன. ஆண்களும் கேள்விகள் அனுப்புகின்றனர். இவ்விரண்டும் கண்டிப்பாகத் தவிர்க்கப்படும். பலனடையக் கூடிய விஞக்களுக்கு மட்டும் பதில் தரப்படும். அடுத்த வாரம் இப்பகுதி இடம் பெறும்.

செல்வி அக்கா

**சில கேள்விகள்**
செல்வி அக்கா,
சுதந்திரன்
த. பெ. எண் 1183
கொழும்பு.

# ஆசிரிய இடமாற்றம் பொதுவான ஒன்ருக அமைய வேண்டும்

## ஆசிரிய சங்கங்களின் ஒத்துழைப்பு இதற்கு அவசியம்

பாடசாலைகள் அரச உடமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து அனுமார் வால் போல் நீண்டு வரும் தமிழ் ஆசிரிய இடமாற்றம் இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இப் பிரச்சினையையிட்டு பலதரப்பட்ட கருத்து நாட்டு மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் ஆசிரியர்களிடம் நிலவி வருகிறது. இது பற்றிய உண்மை நிலையை நமது வாசகர்களுக்குப் புரிய வைக்க வேண்டுமென்று உயர்ந்த நோக்கத்தோடு இரு வாரங்களுக்கு முன்னர் நாம் விடுத்த வேண்டுகோளை ஏற்று பலரும் தங்கள் கருத்துக்களை எழுதியனுப்பியுள்ளார்கள். அவற்றில் வெளிமாகாண ஆசிரியர்களின் நிலையை உணர்த்தும் கட்டுரை இவ்வாரம் இடம் பெறுகிறது. தொடர்ந்து பலரது கருத்தும் இப்பகுதியில் இடம் பெறும்.

பிரதி வருடமும் ஆசிரியர் இடமாற்றத் திட்டம் வகுக்கப்பட்டு, அத்திட்டம் அமுலாக்கப் படுவதற்குப் பலவழிகளிலும் தடைகள் ஏற்படுவதும்; அத்திட்டம் முழுமையிழப்பதும் விசனிக்கத்தக்க விடயமாக இருந்துவருவது கண்கூடு.

இத்தடைகள்; ஆசிரியர்களின் உரிமை நலம் பாதுகாக்கும் சங்கங்களாலும்; நிருவாகத்தைச் சீராகவும் ஒழுங்காகவும் கண்காணித்துத் தொண்டுசெய்ய வேண்டிய ஒரு சில பாராளுமன்றப் பிரதிநிதிகளாலுமே ஏற்படுகின்றன வென்று அறியக் கிடக்கின்றது. உருப்படியான திட்டங்களை வகுக்க வேண்டிய ஆசிரியர் சங்கங்கள், உருவாகும் திட்டங்களைச் சிலரது நன்மைகருதி உருக்குலைக்கும் பட்சத்தில், பெரும்பாலான உறுப்பினர்களின் மனக்கசப்பையும் வெறுப்பையும் ஏற்றுத்தானுகவேண்டும். பொதுத் தாபனமென்ருல், அதுவும் ஓர் தொழிற் சங்கமென்ருல் சகல உறுப்பினரதும் உரிமை நலங்களைச் சமமாக—சனசக்திக்குத் தெம்பாக இயக்க வேண்டியது அவசியம்.

### கடமையுணர்வு அற்ற ஆசிரியர்கள்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர் சங்கங்கள் தாபிக்கப்பட்டுச் சகல உறுப்பினர்களினதும்; மாணவர்களினதும்; நாட்டினதும்; நலன்கருதிப் பல்வேறு மாகாணங்களிலும் துணைச் சங்கங்களைத்தாபித்து இயங்கிவருவதாகப் பெயரளவிற் கூறப்படுகிறது உண்மையில் நடப்பதைக் காணும்போதும், நினைக்கும்போதும் வேதனையாகவும் வெட்கமாகவும் படுகிறது. தாய்ச் சங்கங்கள் கிளைச்சங்கங்களைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பதிலாக; வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள ஆசிரியர்களுக்காக மட்டுமே அவைகள் இயங்குவதுபோல் தெரிகின்றன. ஒய்வுநேரப் பொழுது போக்குப் போற் சில ஆசிரியர்கள் தம் சொந்த இடங்களில் ஆசிரியத் தொழிலைச் செய்யச் சங்கங்கள் இடமளிக்கின்றன. அதே நேரத்தில் இலங்கையின் ஏனைய ஏழுமாகாணங்களிலும் பரந்து இன்னல்களில் நலிந்து, இடர்பாடுகளோடு பணிபுரியும் ஏனைய ஆசிரியர்களின் நலன்களை மறந்துவிடுகின்றன.

பொழுது போக்கிற்காகச் சொந்த இடங்களில் ஆசிரியத்தொழிற் செய்பவர்களெனக் குறிப்பிடும்போது, இடமாற்றத் திட்டத்துக்கு இடர் விளைக்கும் ஆசிரியர்களையே குறிக்கிருேம். அவர்களுக்குத் தொழில் 'விளையாட்டாக' இருப்பதினுற்ருன் ஏனைய ஆசிரியர்களின் இன்னல் தென்படுவதில்லை. 'யாதும் ஊரே யாவருங் கேளீர்' என்ற மனப்பண்புள்ளவர்கள் குறுகிய நோக்கோடு திட்டங்களை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்ற மாட்டார்கள்!

### 'திருவோணம்'

கடமையுணர்ச்சியுள்ள எந்த ஆசிரியரும் வெளியிடங்களுக்குச் சென்று கடமையாற்ற மறுக்கமாட்டார்கள்.

### இடமாற்றத்தால் கல்வி பாதிக்கப்படுமா?

ஏறக்குறைய எண்பது தமிழ்ப்பாடசாலைகள் தென்னிலங்கையில் மூடப்பட்டுவிட்டன. இன்னும் பல பாடசாலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன வென்றும் அறியக்கிடக்கின்றது. 'தேடு கல்வியில்லாதவோர் ஊரைத் தீயினுக்கிரையாக மடுத்தல் கேடுதீர்க்கும்......' என்று கல்வியின் பெருமையைப் புகட்டும் நிலை மாறிவருவது வருந்தத்தக்கது. நடைமுறைக்கு ஒவ்வாது எதிர்க் கூச்சல்களிடும் சுயநலமிக்க ஆசிரியர்களாலும்; சங்கங்களாலும்; அவர்களுக்கு ஒத்தாதும் சக்திகளினுலுமே இந்நிலை ஏற்படுகிறதென்பதை மறுக்க முடியாது.

இடமாற்றத் திட்டத்தை எதிர்த்து எழும் கூச்சல்களைப் பார்க்கச் சிரிப்பாக இருக்கிறது. ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்வதால் மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படுகிறதாம்...? ; ஆசிரியர்கள் மாற்றத்தைச் சிந்தை? செய்தபடி பயந்து கடமையாற்ற வேண்டியிருக்கிறதாம்! காலி இடங்கள் புதியவர்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டுமாம்.

நல்ல காரணங்களையா இவைகள்! ஒரு பாடசாலையிற் கற்பிக்கும் ஆசிரியர் மாற்றப்படுவதால் கல்வித்தரம் எப்படி ஐயா பாதிக்கப்படும்? உளவியலறிவும்; கல்விக் கொள்கையறிவும் போதாமையினுற் கூறப்படும் காரணங்கள் இவைகள் என்று சொல்லும் போது நம் ஆசிரியச் சோதருக்காகப் பரிதாபப் படவேண்டியிருக்கிறது.

புதுப்புது உபகரணங்களை மாணவன் கண்டு பூரிப்படைந்து, பூரணமுயற்சியில் மனமொன்றி ஈடுபடுவது போலப் புது ஆசிரியர்களை வகுப்பிற்கண்டு பொலிவு கொள்கிருன். ஆசிரியா தமக்குரிய இயல்போடு தொழிற் படுமிடத்து மாணவர் அத்தகைய எந்த ஆசிரியருடனும் ஒன்றிமுயற்சியில் வெற்றி காண்பான். ஒரே ஆசிரியரிடம் பாடம்கேட்டு பயிற்சி பெறுவதிலும்; பலரைப் புதிதுபுதிதாகக் காண்பதிற் பலவழிகளிலும் 'பூரணத்துவம்' அடைகிருன. பழக்கப்பட்ட புளித்த முகத்தைவிடப் பழக்கப்படாத புதிய முகத்தைத் தரிசிப்பதிற் 'கவர்ச்சியும்' 'சுவையும்' கூடிய பயன் தருகிறது.

### வெளி மாகணத்தவர் தரங்குறைந்தவரா?

தவிரவும், பாடவிதானப்; பாடத்திட்டம் என்பன குறித்த ஆசிரியர்களால் மட்டுமின்றி எல்லா ஆசிரியர்களாலும் அறியப்படுவன—செயற்படுத்தக் கூடியன (விஷேட பகுகளைவிட) என்பதை இன்றைய ஆசிரியர்கள் அறியாதிருப்பது வருந்தத்தக்கது! இவர்கள் காட்டும் காரணங்கள் தங்களுக்கு மட்டுந்தான் கற்பிக்கத் தெரியும்—(சொந்த இடங்களில் இருந்தபடி) ஏனைய ஏழு மாகாணங்களிலுமுள்ள தமிழாசிரியர்களுக்குக் கற்பிக்கத் தெரியாதென்பதாகவும் அமைகிறது. 'கிணற்றுத் தவளை' நாட்டு வளப்பம் பேசுவதுபோன்ற நியாயம் இது. அகில இலங்கையிலும் சேவை செய்யச் சம்மதித்துள்ள ஆசிரியர்கள் வெளியிடங்களிற் சேவை செய்யவும்; நியாயமான மாற்றத் திட்டத்தை அமுல் நடத்தவும் கருத்துக் கொண்டால் தென்னிலங்கையில் தமிழ்ப் பாடசாலைகள் ஏன் மூடப்பட வேண்டும்?

இலங்கைப் புவியியற் புறவுருவப் படத்தைக்கொண்டு தான் இடங்களையும்; பாதைகளையும்; அறிந்து கொண்டு அப்படியே சொந்த இடங்களில் மட்டும் இருந்து சேவையென்றபெயரில் 'துரோகம்' விளைக்கும் ஆசிரியர்சிலர், மாற்றத்தை எதிர்த்துப்

(14-ம் பக்கம் பார்க்க)

# தாம்பத்திய வாழ்க்கை சீராக...




பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி நா. கந்தையா**

செ. ந.
வத்தளை.

கே: மணமாகி நான்கு ஆண்டுகள். வயது 32. தாம்பத்திய உறவில் பூரணமாக ஈடுபட முடியவில்லை. பல வைத்தியர்களை சந்தித்தும் பலனில்லை. தகுந்த முறையில் ஆலோசனை கூறி எனக்குப் புதுவாழ்வு அளிக்கவும்.

ப: உங்கள் நிலைமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றேன். இருந்தும் உங்கள் மனேநிடத்தை கைவிடவேண்டாம். தகுந்த உணவு, பால், பழம் நன்கு சாப்பிட்டு வரல் வேண்டும். தாம்பத்திய உறவைக் குறைத்து உங்கள் தேகத்தை போஷிக்கவும். இதற்கு மனைவியின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

செ. இராசதுரை,
சுன்னுகம்.

கே: வயது 22. எனது நிறை 138. எனது குடும்பத்தைப் பற்றி யோசிக்கும் போது, அல்லது அதிர்ச்சி தரும் செய்திகளை கேட்கும் போது எனது தேகம் நடுங்குகின்றது. பத்திரிகை வாசிக்கும் போது கைகள் நடுங்குகின்றன. ஏன்? தயவுசெய்து தெரிவிக்கவும்.

ப: உமக்கு எதுவிதமான ரோகமுமிருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ அதிர்ச்சியான நிகழ்ச்சி உம்மனதில் இடம் பெற்றிருக்கிறதென எண்ண வேண்டியிருக்கின்றது. எதையும் மனேவலிமையுடன் செய்யவும்-தக்கபலனுண்டு.

திருமதி. இலட்சுமி,
மாத்தளை.

கே: எனது மூக்கின் இரு பாகங்களிலும் செதில் போன்ற தேமல் படர்ந்து சுருக்கம் சுருக்கமாக இருக்கின்றது. சடும் பனிகாலத்தில் சொற சொறப்பாக இருக்கின்றது. தீர்ப்பதற்குரிய வழிகூறுங்கள்.

ப: முறையாக மீன்எண்ணை பாவிப்பது நன்று. அத்தோடு மரக்கறி வகைகள் நிறையப் பாவிக்கவும். எண்ணெய் ஸ்நானம் நன்று. பச்சை மஞ்சள் அரைத்துப்பூசிக் குளிக்கவும். நல்லகுணம் கிடைக்கும்.

திருமதி ப. பகவதிஅம்மா,
சண்டிலிப்பாய்.

கே: வயது 26. ஏழுமாதங்கட்கு முன் ஒரு சேய்க்குத் தாயானேன். அன்று தொடக்கம் தலைமயிர் உதிர்கின்றது. இதற்கு என்ன செய்யலாம்.

ப: கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. முதற்குழந்தை பிறக்கும் போது சிலருக்கு இப்படி ஏற்படுவது சகஜம். ஏன் பாட்டிமார்கள் இப்படிக் கூறுவார்கள்: 'பிள்ளைதாயின் முகத்தைப் பார்க்கும் போது தாயின் நெற்றிப்புறமயிர் உதிர்வதென்று.' காரணம் மயிர் உதிராமல் இருப்பதற்கு வேண்டிய உயிரூட்டி சத்துகள் இல்லாமையே. எனவே நல்ல சத்தும், போஷாக்குமுள்ள உணவு மிகமிக முக்கியம். அத்துடன் தகுந்த ஓய்வும், சுத்தமும் அவசியம் வேண்டும்.

வீ. மனேகரன்,
கொழும்பு.

கே: வயது 20. மணமாகவில்லை. ஏறக்குறைய 7 வருடங்களாக தலை குமுறுவது போன்ற வேதனை. உஷ்ணமாக இருக்கின்றது. நெஞ்சு வேதனையும், தலையிடியும் அடிக்கடியுண்டு. மலம் போவது குறைவு.

ப: மலபந்தம் இல்லாது பாதுகாக்கவும். மாதமிரு முறை இலகு பேதிஎடுக்கவும். எண்ணெய் முழுக்கு பிரதானம். பச்சைக் காய்கறி வகைகள் பால், முட்டை, சிறுமீன் வகைகள் உணவில் சேர்க்கவும்.

எம். எம். மொகிதீன்,
வத்தளை.

கே: கடந்தசில நாட்களாக எனது உடம்பு பூராவும் சொறியாக இருக்கின்றது. சில இடங்களில் சொறிவதனுல் காயமும் ஏற்பட்டு விட்டது. சிகிச்சை முறை தாருங்கள்.

ப: இறுல், நண்டு, கருவாடு, மீன், இறைச்சி இவற்றை தவிர்க்கவும். இலகு பேதி சிறந்தது. கடுக்காய் அவித்துக் குடிப்பது நன்று. மிதமான ஆகாரம் உட்கொள்ளவும். சொறிவுள்ள இடங்கட்குச் சுத்தமான வேப்பெண்ணை தடவி விடவும்.

மா. கனகசபை,
திருமலை.

கே: 1963ம் ஆண்டிலிருந்து தும்மல். மூக்கால் நீர் வடிதல், இருமல், மூச்சுவிட முடியாமை, கண்கடித்தல், மூக்கடைப்பு, பெலவீனம். இருமம் போது சளி வருவதில்லை. மிகவும் கஷ்டப்படுகின்றேன்?

ப: உங்களை பீடித்திருப்பது பீனிசரோகம். காலையில் குளிப்பதை நிறுத்தவும். மலசல ஒழுங்கு அவசியம் வேண்டற்பாலது. தகுந்த வைத்தியரிடம் சொல்லி பீனிசத் தைலம் வாங்கிப்பாவிக்கவும்.

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. 1183,
கொழும்பு.

**பலமான போட்டியா? பரீட்சைத் தேர்வா? பலன்!?**

வெற்றிதானே வேண்டும்?
அப்படியாளுல்
இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே எனக்கொரு கடிதமெழுதுங்கள்!

**பி. எம். திசாநாயக்க,**
—மாந்திரிக கலாநிதி—
கம்பளை. போன்: 454.

சுதந்திரன்
SUTANTIRAN

1965 நவம்பர் மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# வாக்குரிமைக்கு ஆபத்து!

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குரிமையை ஒரே வாரத்தில் பறிப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

'உங்களை இந்நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏழு நாட்களில் குடியுரிமையை நிரூபியுங்கள். தவறினால், வாக்காளர் இடாப்பிலிருந்து உங்களின் பெயர் நீக்கப்பட்டுவிடும்' என்று பிரதமப் பதிவுத் தலைமை அலுவலகம் தமிழ், முஸ்லிம் வாக்காளர்களுக்கு ஒரு சுற்று நிருபம் அனுப்பியிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபம் இந்நாட்டு வம்சாவழிப் பிரஜைகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதால், இது திரை மறைவில் நடைபெறும் ஒரு பெரிய சதி என்றே சந்தேகின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் வாக்குரிமையைக் குறுகிய காலத்தில் அபகரிப்பதற்கு இது மிக இலகுவான வழியாகும். ஒரே வாரத்தில் குடியுரிமையை நிரூபிப்பதற்கு இந்த நாட்டில் எந்த நபராலும் சாத்தியமில்லை என்பது பதிவுத் தலைமை அலுவலகத்துக்குத் தெரியும். தெரிந்திருந்தும் இச்சுற்று நிருபம் அனுப்பப்பட்டதேன்? குடியுரிமையை நிரூபிப்பதற்கான தஸ்தாவேஜுகளைச் சேகரிக்கவே பலமாதங்களாகுமே!

ஆகவே இச்சுற்று நிருபத்தின் ஒரே நோக்கம் தமிழ் பேசும் மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதே என்பதில் ஐயமில்லை.

தேசிய ஆட்சியிலும் ஒரு சிலர் சேர்ந்து சிறுபான்மையோரின் உரிமைகளை அபகரிப்பதற்காக நடத்தும் சதிச் செயல்களில் இதுவும் ஒன்று.

இச்சதிச் செயலின் முக்கிய நோக்கம் அடுத்துவரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதே.

மற்றொரு நோக்கம் அரசாங்கத்தின் மீது சிறுபான்மை மக்களிடையே வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்துவதாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சிக்கும், பின்னர் தேசிய அரசாங்கத்துக்கும் ஆதரவளித்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களிடம் பழிவாங்குவது பிறிதொரு நோக்கமாகும்.

கொழும்பு நகர வாக்காளர்களில் 40% விகிதம் பேர் தமிழ் பேசும் மக்களாவர். இன்னும் மூன்று வாரங்களில் நடை பெறவிருக்கும் மாநகர சபைத் தேர்தலில் அவர்களின் வாக்குகள் ஐ. தே. கட்சிக்குக் கிடைக்காமல் தடுப்பதற்காகவே இந்த சூட்சமத்திட்டம் கையாளப்பட்டுள்ளது. ஒரே வாரத்தில் அவர்களின் வாக்குரிமையைப் பறித்துவிட்டால் தேர்தலில் ஐ. தே. கட்சிக்குப் பலத்த அடி கொடுக்கலாம் என்பது அவர்களின் எண்ணம்.

இன்று தமிழ் பேசும் மக்கள் தேசிய அரசாங்கத்தைப் பூரணமாக ஆதரிக்கின்றனர். ஆதரவாளர்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு தேசிய அரசாங்கம் முன்வந்தால், அந்த அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு நிச்சயம் வெறுப்பு ஏற்படும். அதனால் சிறுபான்மையோரை அரசாங்கத்திடமிருந்து பிரித்துவிட வழிபிறக்கும்.

உண்மையில் தேசிய அரசாங்கத்துக்கும் இச்சுற்று நிருபத்துக்கும் சம்பந்தமில்லை என்றே தெரிகிறது ஒருசில அதிகாரிகள் கூடிச் செய்யும் சதிதான் இது. எதிர்க் கட்சியினரின் ஆதரவாளர்கள் பலர் இன்னும் அநேக திணைக்களங்

# தமிழுக்கு உரிய இடம் எங்கே தரப்பட்டிருக்கிறது?

அரசாங்கத் திணைக்களங்களிலும் கூட்டரவுகளிலும் நிர்வாக முறையில் தமிழுக்கும் போதுமான உபயோகம் அளிக்கப்பட்டு வருகிறதா?

நாட்டிலே இன்று இவ்வினா பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது.

இவ் வினாவுக்கு விடை பகருவோர், 'இல்லவே இல்லை; தமிழுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை' என்று பதிலளித்துவிடலாம்,

தேசிய அரசாங்கம் ஏற்பட்டு எட்டு மாதங்களுக்கு மேலாகிறது. தேசிய அரசாங்கத்தில் தமிழ் பேசும் மக்களும் பங்கு கொண்டுள்ளனர். 'தமிழ் மொழிக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழ் பேசும் மக்கள் இதுவரை அனுபவித்துவந்த அத்தனை துன்பங்களும் தீர்ந்து, துயரம் துடைத்தெறியப்பட்டு வருகிறது'' என்று கூறப்பட்டு வருகிறது எதிர்க் கட்சிகளும், 'தமிழ் பேசும் மக்களுக்கு அளவுக்கதிகமான சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகிறது' என்று ஓலமிடத் தொடங்கிவிட்டன. ஆனால் தமிழ் மொழிக்கு உரிய இடம் கொடுக்கப்படுவதாயில்லை. தமிழ் பேசும் மக்களுக்குப் போதுமான உரிமைகள் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. இந்த உண்மையினை பல தமிழ்ப் பிரமுகர்களும் ஒப்புக்கொண்டே வருகின்றனர்.

அரசாங்கத் திணைக்களங்களிலிருந்து வெளியாகும் சுற்று நிருபங்கள் யாவும் மும்மொழிகளிலும் இருக்க வேண்டும் என்பதனை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. அரசாங்கம் வெளியிடும் சகல வெளியீடுகளிலும் தமிழ் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தமிழ் உபயோகம் பற்றி அவ்வப்போது அரசாங்கத்தால் கட்டளைகள் பிறபிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால் பலன் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை, 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற பழமொழிக்கொப்ப தமிழுக்கு உரிய இடம் புறக்கணிக்கப்பட்டு வருவதை காணுகிறோம்.

அரசாங்கத் திணைக்களங்கள் இந்த இலட்சணத்துடன் இயங்கும்போது, ஏனைய பொதுத்...

தொரு வண்ணமுமாக சிங்களம் மட்டுமே அரசோச்சுவதை அவதானிக்க முடிகிறது.

கொழும்பிலே உள்ள மத்திய பஸ் நிலையத்திலுள்ள கால அட்டவணைகள் எல்லாமே தனிச் சிங்களத்தில் உள்ளன. கொழும்பு நகர வீதிகளில் நடப்பட்டுள்ள பஸ் வண்டிப் பாதைகளைக் குறிக்கும் அடையாளப் பலகைகள் அத்தனையும் தனிச் சிங்களத்திலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. சிங்களம் தெரியாதவர்கள் பஸ் வண்டிகளைப் பாவிக்கக் கூடாது என்பது தான் இதன் பொருளா என்று ஏனைய மொழி பேசும் மக்கள் கருத வேண்டி இருக்கிறது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

மத்திய பஸ் வண்டி நிலையத்தில் ஒலி பெருக்கி மூலம் வண்டிகளின் போக்கு வரவைக் குறித்து அவ்வப் போது அறிவித்தல்கள் கொடுக்கப்படுகின்றன. இவ் வறிவித்தல்களும் சிங்களத்தில் மட்டுமே கொடுக்கப்படுவதால், சிங்களம் தெரியாதவர்கள் தினசரி சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

உதாரணத்துக்காக போக்குவரத்துத் துறையில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வருவதை எடுத்துக் காட்டினோம். இத்தகைய புறக்கணிப்பு

கண்காணிப்பதற்காகவுமே ராணுவம் வடபகுதியில் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் ராணுவத்தினர் சாதாரணக் குடிமக்களுக்குப் பீதியை உண்டுபண்ணும் வகையில் நடந்துகொண்டு வருவதாகவே அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன.

ராணுவத்தினரின் அத்துமீறிய செயல்களைப்பற்றித் தொடர்ந்து கிடைத்துவந்த புகார்களைக்கொண்டு பல விசாரணைகள் நடைபெற்றன. சிலருக்குத் தண்டனைகளும் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. விசாரணைகள் நடைபெற்றுத்தண்டனைகள்கொடுக்கப்பட்டும் அட்டகாசம் கட்டுக்கடங்காமல் இருப்பது ஆச்சரியப்படத் தக்கதாகும்.

சில கிராமப் புறங்களில் இரவு வேளைகளில் 'ஜீப்' வண்டிகளில் சென்று வீடுகளுள் புகுந்து பலரையும் தாக்குகின்றனராம். இவர்கள் பிரயாணம் செய்யும் 'ஜீப்' வண்டியிலுள்ள அடையாள எண்களையும் மறைத்துவிடுகின்றனராம். இதனால் இவர்களை யிட்டுப் புகாரிடவும் பொதுமக்களால முடிவதில்லை. சம்பந்தப்பட்ட ராணுவ வீரர் எல்லோருடைய தோற்றமும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகவிருப்பதனாலும் அவர்களை இலகுவில் அடையாளம் காண்பிக்க முடிவதில்லை.

பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. க. துரைரத்தினம் அவர்கள் ராணுவ வீரர் ஒவ்வொருவருக்கும் இலக்கங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார். அப்படியானால் குற்றம் புரிவோரை இல

## 'பழைய குருடி கதவைத் திறடி' கதையிலே மாற்றமில்லை

சகல பொதுத்துறைகளிலும் இன்னும் நிலை பெற்றிருக்கிறதேயன்றி அழிந்தொழிந்து போகவில்லை.

அமைச்சர் அவை எடுத்த முடிவுகளுக்கும் இதுவரை திணைக்களங்களும் கூட்டரவுகளும் செவி மடுத்ததாகத் தெரியவில்லை. இது தமிழ் பேசும் இனத்தைப் புறக்கணிப்பதாக மட்டுமல்லாமல் அமைச்சர்களின் உத்தரவுகளையே புறக்கணிப்பதாகவிருப்பதால் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மனிதாபிமானத்துடன் தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்றும்

குவில் அடையாளம் கண்டுபிடித்துவிட முடியும். தங்களைப் பொதுமக்கள் அடையாளம் கண்டுபிடித்துவிடுவார்களே என்ற பீதியில் ராணுவத்தினரும் அடங்கிவிடுவார்கள். வேலியே பயிரை மேயும் விந்தைச்செயல் நடைபெறவும் இடம்இருக்காது. ஆகவே, உடனடியாக ராணுவத்தினருக்கு இலக்கங்கள் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறோம்.

### உள்ளூர் விஷமிகள்

1956, 1958, 1961-ம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ராணுவ அட்

## மொழிபெயர்ப்பு நாசம்:

# விசாரணை நடைபெறும்

——o——

# தமிழரசுத் தந்தைக்கு நீதி அமைச்சர் கடிதம்

——o——

## சுதந்திரன் செய்தியின் எதிரொலி

அரசகரும மொழித் திணைக்களத்திலிருந்து நாசமாக்கப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்புகள் பற்றி விசாரணைநடத்தப்போவதாக நீதி அமைச்சர் திரு. ஏ. எப். வியேமான்ன தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு அறிவித்துள்ளதாக அறியப்படுகிறது. இம் மொழி பெயர்ப்புகள் நாசமாக்கப்பட்டது பற்றி சுதந்திரன் முதலில் செய்தி வெளியிட்டிருந்ததுடன், சுதந்திரன் அரசியல் நிருபர் (3-10-65) இது பற்றி பகிரங்க விசாரணை ஒன்று நடாத்த வேண்டுமென்று வற்புறுத்தியதும் வாசகர்கள் அறிந்ததே.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் பதவி உயர்வுக்காக அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் தமிழ் மொழியிலான பரீட்சையை முறியடிக்கும் நோக்கத்துடன் அரசகரும மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த சிலர் நிர்வாகச் சட்டங்கள், நிதிப்பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புக்களை நாசமாக்கி விட்டார்களென அறியப்படுவதாக சுதந்திரன் (3-10-65) செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தியையொட்டி 'சுதந்திரன் அரசியல் நிருபர்' தமது குறிப்பில் பகிரங்க விசாரணை நடாத்தும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டிருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

சுதந்திரன் செய்தியையொட்டி அரசகரும மொழித் திணைக்களத்திற்குப் பொறுப்பான நீதி அமைச்சருக்குத் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஒரு கடிதம் எழுதியிருந்தாரென்றும் அக்கடிதத்திற்கு நீதி அமைச்சர் திரு. ஏ. எப். வியேமான்ன எழுதிய பதிலில் இந்நாசவேலை பற்றி உடன் விசாரணை நடாத்த ஒழுங்குகளை மேற்கொள்வதாக அறிவித்துள்ளாரென்றும் அறியப்படுகிறது.

அரசகரும மொழித் திணைக்கள முதல்வரிடம் இம்மொழி பெயர்ப்புகள் பற்றி அமைச்சர் வினவிய இடத்து, மேற்கூறப்பட்ட சட்டவிதிகள் 1956ம் ஆண்டுக்கு முன்னர் மொழிபெயர்க்கப்பட்டது உண்மையென்பதை அவர் ஒப்புக்கொண்டதாகவும், அம்மொழி பெயர்ப்புகள் இப்பொழுது காணமற்போனது பற்றிய விபரம் தெரியவில்லையென்று கூறியதாகவும் நீதி அமைச்சரின் கடிதத்திலிருந்து தெரிய வருகிறதாம்!

இம்மொழி பெயர்ப்புகள் பற்றி திணைக்கள முதல்வர் கொடுத்த விளக்கங்களிலிருந்து நீதி அமைச்சர் மொழிபெயர்ப்புகள் நாசப்படுத்தப்பட்டிருக்கலாமென்று நம்புவதற்கு இடமிருப்பதாலேயே இது பற்றி பெரிய அளவில் விசாரணை நடாத்தமுடிவு செய்துள்ளாரென்று தெரிகிறது.

## மத்திய வங்கி ஊழியரின் எதிர்ப்பு

இலங்கை மத்திய வங்கியில் நடைபெறவிருக்கும் பதவி உயர்வுக்கான தெரிவையொட்டி நடைபெறும் முன்னேற்பாடான ஏற்பாடுகளில், பதவி உயர்வை எதிர்நோக்கி நிற்பவர்களிடம் அவர்களின் சிங்களத் தகைமை பற்றி நிர்வாகத்தினர் வாய் மூலம் விபரம் சேகரித்து வருகிறார்களாம். இந்த முறையை எதிர்த்து வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் நிர்வாகத்தினருக்கு நீண்டதொரு ஆட்சேபக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

எழுத்து மூலம் பெற வேண்டிய விபரங்களை நிர்வாகத்தினர் வாய் மூலம் கோருவது தவறு என்பதுடன் சிங்களத் தகைமையற்றவர்களுக்கு விதிக்கப்பட்ட நட்டஈட்டுத்திட்டத்தை அகற்றியமையினால் நிலைமை சீரடைந்து விட்டதாக தாங்கள் கொண்ட முடிவும் தவறாக உள்ளது என்று தமிழ் ஊழியர் சங்கம் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சரவையின் 27-7-65ம் திகதி முடிவையொட்டி நீதி அமைச்சர் விடுத்த சுற்று நிருபத்தின் மூலம் தாங்கள் சிங்களத் தகைமை பெற வேண்டியதில்லையென்றும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ் ஊழியர்களிடம் சிங்களத் தகைமை பற்றிக் கேட்பது தவறு என்றும், கேட்கும் முறை ஒழுங்கற்றதென்றும், பதவி உயர்வுக்குச் சிங்களத் தகைமை வேண்டியதில்லையென்றும் அக்கடிதத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## தமிழுக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைதூக்கியிருப்பதாகவே செய்திகள் கூறுகின்றன. தங்களின் சொந்தப் பகையாளிகளைப் பழிவாங்குவதற்கு ராணுவ வீரர்களைச் சினேகம் பண்ணி, விருந்து கொடுத்து ஏவிவிடுகின்றனராம் சில விஷமிகள்.

இச்செய்தியை உற்றுணரும்போது ராணுவவீரர்களை பிழையான வழிக்கு இட்டுச் சென்று விஷமம் புரியும் வீணர்களே முதன்முதலில் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டியவர்கள். இவர்களிடம் பொதுமக்கள் 'மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டியதே மிக முக்கியமான கடமையாகும்.

## பேச்சுப் போட்டி

'கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்படும் ஆறுமுக நாவலர், அமரகவி சுப்பிரமணிய பாரதியார், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள் ஆகியோர்களின் நினைவுப் பேச்சுவன்மைப் போட்டிகளின் ஆரம்பத் தேர்வுகள் 25-12-65; 26-12-65 ஆகிய தினங்களிலும், இடைத்தேர்வுகள், இறுதித்தேர்வுகள் 1966 சனவரி 12, 13 ந் திகதிகளிலும் நடைபெறுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

'இப்போட்டிகட்குரிய விண்ணப்பங்கள் 10-12-65 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.' என விவேகானந்த சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.


**இனும்! இனுர்!! இனுர்!!!**

**ரூ. 600-00 தரும்**

**அருத எண்ணெய்**

**அதிர்ஷ்டப் பரிசு அஞ்சலட்டைகள்**

இலங்கையடங்கிலுமுள்ள எல்லா வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 1-வது பரிசு: | ரூ. | 150-00 |
| 2-வது பரிசு: | ரூ. | 100-00 |
| 3-வது பரிசு: | ரூ. | 50·00 |

தலா ரூ. 25-00 கொண்ட 12 ஆறுதல் பரிசுகள்!

பாவனையாளர் கவனத்திற்கு

1. உங்கள் ஊரிலுள்ள பல வியாபாரிகளிடத்தில் அருத எண்ணெய் விற்கப்படுகின்றது.

2. நீங்கள் ஒரு முழு/அரை/கால் 2 அவுன்ஸ் போத்தல் ஒன்றினை வாங்கி, எண்ணையை முற்றாகப் பாவித்த பிறகோ அல்லது வேறு போத்தலில் ஊற்றிக் கொண்ட பிறகோ, லேபல் ஒட்டிய எங்கள் வெற்றுப் போத்தலை உங்களது வியாபாரிகளிடத்தில் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்.

3. மேற்படி வெற்றுப் போத்தலை பெற்றுக்கொண்ட வியாபாரியார் உங்களுக்கு எங்களது விலாசம் அச்சிடப்பட்ட அதிர்ஷ்டப் பரிசு அஞ்சலட்டை ஒன்றினை வழங்குவார். அதனை நிரப்பி முடிவுத் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

4. எமக்கு கிடைக்கப்பெறும் அஞ்சலட்டைகளை முடிவுத் திகதிக்கு மறுநாள் குலுக்கி, முதலாவது, இரண்டாவது, மூன்றாவதாக எடுக்கப்படும் அஞ்சலட்டைகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளும், அடுத்து எடுக்கப்படும் 12 அஞ்சலட்டைகளுக்கும் தலா ரூ. 25/- வீதம் ஆறுதல் பரிசுகளும் அளிக்கப்படும். பரிசு பெற்றோரின் பெயர் விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

5. போட்டி நிர்வாகிகள் தீர்ப்பே இறுதி முடிவானது. இது சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்துகளும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

**முடிவுத் திகதி: 31-12-65**

—அருத எண்ணெய்—

கண், தலை, காது, மூக்கு சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கும் சாலச் சிறந்தது.

**பி. எம். திசாநாயக்க**

—தயாரிப்பாளர்—

**அருத எண்ணெய் தொழிலகம்**

**கண்டி ரோட், கம்பளை.**

போன் : 454.

குறிப்பு:

ஏஜன்சி விரும்பும் வியாபாரிமார் தயவுசெய்து மேற்படி விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.


## 'தமிழரசு-ஐ. தே. கட்சி....

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

யம்பர்ஞந்து முதலியோரால் அண்மையில் நிறுவப்பட்ட "நாம் சிங்களவர் இயக்கம்" நாடு பூராவும் டிசம்பர் 11-ந் தேதி ஒப்பந்தத்தை எதிர்த்து ஓர் இயக்கம் தொடங்கப் போவதாகவும் கூறப்படுகிறது.

ஒப்பந்த — எதிர்ப்பு என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக தற்பொழுது நடக்கும் பிரசாரமும், மேற்கண்ட தீவிர இயக்கங்களும் நாட்டிலே வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிவிட்டு ஒரு கலகத்தைத் தோற்றுவிக்க வழி வகுக்குமென அரசியல் வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

வகுப்புக் கலவரங்கள் ஏற்படக்கூடிய நிலைமை உருவாக்கப்படுகிறதென்பதை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் உணர்ந்திருப்பதாகவும் தெரிகிறது, சென்ற வாரம் நடைபெற்ற சுதந்திரக் கட்சி நிர்வாகக்குழுவின் கூட்டத்தில், "மீண்டும் வகுப்புக் கலவரம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினாராம்.

உடன்படிக்கையை எதிர்த்து நாட்டிலே ஒரு வகுப்புவாதக் கிளர்ச்சியைத் தூண்டிவிடும் அதே சமயத்தில் பாராளுமன்றத்திலும் இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றினைப் பிரேரிக்க எதிர்க்கட்சிகள் முயற்சி செய்வதாக அறியப்படுகிறது.

இத்தகைய பிரேரணை தங்களின் கிளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்று அவர்கள் கருதுகின்றனராம்.


**ஜீ. சீ. ஈ. (சா. த.)**

பரீட்சையில் தேற உதவி புரியும்.
பட்டதாரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாவிடை பயிற்சிக் கோவைகள்.

| | |
|---|---|
| ● தமிழ் பாஷை | 5-00 |
| ● எண் கணிதம் | 5-00 |
| ● குடியியல் | 5-00 |
| ● உடனலவியல் | 5-00 |
| ● சரித்திரம் | 5-00 |
| ● இஸ்லாம் | 5-00 |
| ● பொது அறிவும் விவேகமும் | 5-00 |

101 கட்டுரைகள் ரூ. 7-50

**சர்வகலாசாலை போதனை கழகம்**
**(U T I)**
540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு.

**பிரம்மோபதேசம் பெற்றுப் பூனூல் அணிந்த உண்மைப் பிராமணராய் வாழ விழைந்த சுந்தர சர்மா......உருவத்தைக் கொண்டு உண்மைப் பிராமணனை மதிப்பிட முடியாது என்று கூறித் தனி வழி சென்ற சுந்தசுரேசன்........**

**—இப் பகைப் புலத்தில் புனையப்பட்ட இச் சிறுகதையை எழுதிய எஸ். சண்முகநாதன் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர். நல்லதோர் எதிர்காலம் கரம் நீட்டுகிறது.**

வானத்தையே பார்த்துக் கொண்டிருந்த சுந்தர சர்மா நீண்ட பெருமூச்சுடன் நிமிர்ந்தார். அவர் கண்களுக்கு வானமும் பூமியும் என்றும் ஒரே மாதிரி இருப்பதாகத்தான் தோன்றிற்று. பழாய்ப்போன மனிதன் தான் நாளைக்கு ஒருமாதிரி மாறுகிறுன் என்ற நினைவில் சலித்துக்கொண்டார். மாலை மறைந்து வானத்தில் இருள் கவியத் தொடங்கும் நேரம் அவர் வெட்ட வெளியான அந்த வயல் பரப்பில் வரம்பின் மேல் அமர்ந்து கொள்வார். பகல் முழுதும் அடித்த வெயிலின் கொடுமை அப்போதும் அவர் அமர்ந்திருக்கும் மண்ணின் மீது தெரியத்தான் செய்யும், அதனை அவர் கவனிக்க மாட்டார். விழிகள் மதையோ தேடுவதுபோல் ஊனத்தில் நிலைத்திருக்கும்.

உலகில் அவர் வாழ்ந்து விட்ட காலம் அதிகம் தான். அவர் எத்தனையோ கோடையையும் மாரியையும் பார்த்து விட்டார். எவ்வளவோ இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்துவிட்டார். அவர் உலகத்தை ஒரே பார்வையில் நோக்கினுர். அந்தப் பார்வையில் எல்லாம் சமமாய்த் தான் தெரிந்தன.

தூரத்தில் வெட்டவெளியில் தனித்து நிற்கும் பிள்ளையார் கோவில்கண்களில் படும்போதெல்லாம் நெஞ்சம் அயரசத்தில் தோயும். அவர் வாழ்வின் அதிக நாட்கள் அங்கேதான் கழிந்தன. அங்கே சிலையாய்இருக்கும் பிள்ளையார் கூட சுந்தர சர்மாவின் பூசையில் பூரித்துப்போய் பொலிவுடன் இருப்பதாக அந்த ஊர் சனங்கள் பேசிக் கொண்டார்கள். அது அவர் காதிலும்விதத்தான் செய்தது. அப்போதெல்லாம் அவர் 'எல்லாம் அவன் செயல்' என்று கைகள் நெஞ்சைத் தொட அஞுதியாகப் போய் விடுவார்.

பத்து வயதில் பால்வடியும் முகத்தில் தெய்வீகக்களை சிந்திக்கொண்டிருந்த காலத்தில், தந்தையிடம் பிரம்மோபதேசம் பெற்று பூனூல் அணிந்து, உண்மைப் பிராமணனுய் அந்தப் பிள்ளையார் கோவிலுள் நுழைந்தவர், தமது வாழ்வின் பெரும் பகுதியை அங்கேதான் கழித்தார். பிறப்பினுல் மட்டுமே ஒருவன் பிராமணனுகி விடமுடியாதென்பதில் அவர் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். வேத நெறியில் மநு காட்டும் தர்மவழியில் நின்று மூன்று காலம் சந்தியா வந்தனம் செய்யத்தவருமலும் பிதுர் கடன் நிறைவேற்றுவதில் மறவாமலும் ஆகமம் காட்டும் நெறிப்படி தன்னுடைய கடமையில் வழுவாமல் வாழ்பவன் உண்மையான பிராமணன் என்று நினைத்தார்.

அவரே வாழ்ந்தும் காட்டினுர்.

சுந்தர சர்மா தன்னுடைய உயிரைக் கூடவிட்டு விடச் சம்மதிப்பார். ஆனுல் ஆசாரத்தை மட்டும் விடமாட்டார். அதனுல் தான் உயிரே போவதென்ருலும் ஆசாரம் கேட்டவர்கள் தொட்ட தண்ணீரைக் கூட இவர் அருந்த மாட்டார். அவர் வாழ்வில் பங்கு கொள்ள வந்த பத்தினி ஆசாரத்தில் அவரை விட ஒருபடி மேல் அதில் அவருக்குப் பெருமைதான் அப்படியே தனது சந்ததி முழுதும் அபகீர்த்தி ஏற்பட்டுவிடாமல் உண்மைப் பிராமணராய் இருக்க வேண்டுமென்று அவர் தாம் பூசை செய்யும் பிள்ளையாரை வேண்டிக் கொள்வார்.

அவர்கள் வாழ்வின் முழுப்பயனுய் மனைவி ஓர் மகவை ஈன்று விட்டு இறந்து போனபோது கூட அவர் அவ்வளவு கவலைப் படவில்லை. தன் வம்சத்தை இருளில் விட்டு விடாமல் வழிகாட்ட வாழ வைக்க ஓர் ஒளிவிளக்கைத் தந்து விட்டுப் போவதில் அவர் ஓரளவு திருப்தியும் அடைந்தார். இறந்த காலத்தின் தாம்பத்திய வாழ்வின் கனவையெல்லாம் மகன் மீது அன்பாய் பொழிந்தார். அவனைக் காணும் போதெல்லாம் அவர் உள்ளத்தில் கனவு விரியும், அதில் அவர் குல விளக்கு பிரமம் ஞானமும் வேத சாஸ்திர விற்பன்னமும் பொலிந்து உலகத்தையே பரிபாலிக்கிற மேதையாக ஒரு காட்சி தெரியும்.

அவர் தாம் கண்ட கனவின் வடிவமாகவே சுந்தசுரேசனை வளர்த்தார். வேத சாஸ்திரங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் சொல்லி வைத்தார். அவைகளின்பொருளை சாரத்தை உணர்ந்துவிட்ட ஒருவனுல் கெட்டுப்போக முடியாதென்பது அவர் கருத்து.

கலிகாலம் காட்டும் கோலத்தை உலகத்தில் அவர் தினம் தினம் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். காலம் கெட்டுவிட்டதை அவர் நம்பினுர். அதற்கும் மேலாக மனிதர்கள் கெட்டு விட்டார்கள், நெறிமிக்க வாழ்க்கையிலிருந்து மாறிவிட்டார்கள் என்பதையும் அதிகமாக நம்பினுர்.

முற்றிவிட்ட கலி, ஆசார சீலனுய் உண்மைப் பிராமணனுய் தன்னைப் போலவே வாழவேண்டும் வழி நடக்கவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் மகன் சுந்தசுரேசனிடமே தன் கோலத்தைக் காட்டும் என அவர் எதிர்பார்க்க வில்லை. தன்முன் நிற்கும் தம்பியின் கால்களிலிருக்கும் செருப்பைக் கண்டே கலிவந்து விட்டதை உணர்ந்து கொண்ட இராமமரைப் போல, பட்டணம் போய் விட்டுவந்த சுந்தசுரேசனிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தைப் பார்த்ததும், கலி தன் மகனிடமும் புகுந்து விட்டதென்பதை உணர்ந்து கொண்டார்.

அன்று சுந்தசுரேசன் பட்டணம் போகும்போது கட்டுக் குடுமியுடன் பிராமணனுய்த் தான் போனுன். வரும்போது தான் தலையில் அழகாய் இருந்த குடுமியைக்காணவில்லை. மற்றப் பையன்களைப் போல அவனும் கிராப் வெட்டிக் கொண்டிருந்தான். சுந்தர சர்மா திடுக்குற்று விட்டார். அவர் தம்மைச் சமாளித்துக் கொள்ளவே சிலநிமிடம் பிடித்தது.

'என்னடா...... இது...... கோலம்......'


'இது தானப்பா இந்தக் காலத்திற்கு வேண்டிய கோலம்...... குடுமியைப் பார்த்து எல்லோரும்கேலி செய்கிருர்களே......' சுந்தசுரேசன் வருத்தத்துடன் சொன்னுன்.

'இது தானுடா......உண்மைப் பிராமணன் இருக்கிற லட்சணம்.....'கோபத்துடன் கேட்டார்.


'கிராப்வைத்துக்கொண்டதால் உண்மைப் பிராமணன் இல்லை யென்று ஆகிவிடுமாப்பா...... உருவத்தைப் பார்த்து ஆளை அளவிடுவது தப்பில்லையா......'

அவர் பதில் பேசவில்லை.

சுந்தசுரேசனின் கிராப் தலையைக் காணும் போதெல்லாம் அவருக்கு, பிராமணனுய்ப் பிறந்தும் பூனூலைப் போட்டுக் கொண்டு, அழகாய் 'பத்தாறு' வைத்துக்கொள்ளாமல் ஸ்டைலாக வேட்டி கட்டிக்கொண்டு வாயில் சிகரட் புகையத் திரியும் சில பிள்ளைகள் தாம் நிசாவிற்கு வருவார்கள். அந்த நினைவிலேயே அவர் முகம் சுழிப்பார் 'இவர்களெல்லாம் ஏன் பிராமணர்களாய்ப்பிறந்து அந்த வழியினின்று தவறிப்போகவும் பிராமணர்களென்று சொல்லித் திரிகிருர்களோ......' என்று எண்ணி வேதனையோடு சலித்துக் கொள்வார்.



ஆனுல் சுந்தரேசன் அப்படியெல்லாம் இருப்பானென்று அவரால் நினைக்க முடியவில்லை. அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார். ஆனுலும் அவன் கிராப் வெட்டிக்கொண்டது சரியில்லை என்றே நினைத்தார். இருளில் மூழ்கிப் போயிருக்கும் மனித சமுதாயத்தை தனது ஞானத்தால் ஒளிபெறச் செய்ய வேண்டிய பிராமணர்களோ வழிதவறிப் போய் இருட் கிடங்கில் விழுவதை அவர் வெறுத்தார். அப்படியிருந்தால சாதாரண மனிதருக்கும் பிரம்மோபதேசம் பெற்ற பிராமணர்களுக்கும



என்ன வித்தியாசம்......? சுந்தசுரேசன் வாலிபனுய் வளர்ந்து அரும்பு மீசை முகத்திற்குக் களைகட்ட தம்முன் திரிந்தபோதெல்லாம் அவருக்கு தமக்கு ஏற்பட்டுள்ள புதிய சுமைதான் ஞாபகத்திற்குவரும். தம்முடைய பத்தினி எவ்விதம் ஆசாரத்தில்தம்மை விட ஒருபடிமேலாக விளங்கினுளோ அதே போலவே —வேதகாலத்து மைத்ரேயி, திலோத்தமை போன்ற ஒருத்தி சுந்தசுரேசனுக்கு வாழ்க்கைத் துணையாய் அமைய வேண்டுமென்று கடவுளைவேண்டிக் கொண்டார்.

சுந்தர சர்மாவின் எண்ணத்தில் இடி விழுவதற்காகவே அன்று பகல் முழுதும் அடை மழை பெய்து ஓய்ந்து மாலையை விரைவாகவே இருள் விழுங்கத் தொடங்கி இருந்தது.

அவர் அன்று மாலைப் பூசைக்காக கோயில் குளத்தில் கை, கால் அலம்பிச் சுத்தம் செய்துகொண்டு கரையேறும் போது குளத்தை அடுத்திருந்த நந்த வனத்தில் இரு இளம் உள்ளங்களின் உலகையே மறந்த இன்பத்தின் எதிரொலியாய் சிரிப்புக் கலகலத்தது. அவர் சற்று நிதானமாக நின்று கேட்டார். நெஞ்சில் கலக்கம் மூண்டது. அவருக்கு மனதில் கொஞ்சமிருந்த சந்தேகமும் இல்லாமல்போய் விட்டது. அது சுந்தசுரேசனின் குரலேதான்.

அந்தப்பெண் யார்......?

அவருக்குத் தம் ஆசைக் கனவுகளெல்லாம் கலைந்து போவதாகப் பிரமை தோன்றிற்று எது நிகழக் கூடாதென அவர் விரும்பினுரோ அது நிகழப்போகிறது. எந்தப் பாதையில் அவன் காலடி எடுத்து வைக்கக் கூடாதென அவர் நினைத்தாரோ அந்த வழியில் அவன் நடந்துபோய்க் கொண்டிருப்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்.

அவர் நந்தவனத்துள் நுழைந்து அசம்பசத்தை மரத்தின் மறைவில் நின்று கொண்டு எட்டிப் பார்த்தார். பெண்ணின் முகம் சரியாகத் தெரிந்த போது அவர் திடுககிற்ருர். உலகமே அவர் முன் நடுங்கியது. கோவிலைக் கூட்டி மெழுகி பிறவிப் பெரும் பிணி தீர்க்கச் சேவை செய்து கொண்டிருக்கும் கிழவியின் மகள் அஞ்சலி தான் அவள். அவர் உடைந்து போன இதயத்தை ஒரு நிலைப்படுத்த முயன்ருர், முடியவில்லை. நடுங்கும் கற்பூரச் சுடராய் அவர் உடல் நடுங்கியது.

அமைதியாக நடந்தார். அடுத்த நாட் காலை உதய பூசைக்காக அவன் பூப் பறித்துக் கொண்டு வந்து தந்தையிடம் நீட்டிய போது அவர் அவனை ஏறெடுத்து அமைதியாகப் பார்த்தார். அந்த விழிகளில் விபரிக்க முடியாத வேதனை கப்பி இருந்தது. அவன் அந்தப் பார்வை தன்னை நெருப்பாய்ச் சுடுவதாய் உணர்ந்தான் சுந்தர சர்மாவின் விழிகளில் நிறைந்த பார்வை சுந்தசுரேசனை மட்டுமல்ல நெறி கெட்டு வழி தவறிப் போய்க்கொண்டிருக்கும் இந்த உலகத்தையே சுட்டெரிப்பது போல் வேகம் நிறைந்ததாகத்தான் இருந்தது.

அவர் அமைதியாகச் சொன்னுர்:-

(11-ம் பக்கம் பார்க்க)

# உண்மையும் பொய்யும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"நான் வேதம் காட்டும் உத்தம பிராமணராய் இருக்க விரும்புகிறேன்... நீ விரும்பாவிட்டால்... அதற்காக ஆசாரம் கெட்ட நீ பறித்த பூவைத் தந்து என்னையும், என் ஆத்ம ஈடேற்றத்திற்காக பூசையையும் கெடுத்து விடாதே...''

கூறிவிட்டு அமைதியாகப் போய்க்கொண்டிருக்கும் தந்தையை சுந்தரேசன் வெறுப்புடனும் கலங்கிய கண்களுடனும் பார்த்தான். விஷயம் தந்தைக்குத் தெரிந்துவிட்டதென்பது அவனுக்குப் புரிந்தது. மனதில் வேர் விடும் வெறுப்புடன் "உலகம் புரியாத மனிதர்'' என்று முணுமுணுத்தான்.

அன்றிலிருந்து அவர்கள் வீட்டில் இரண்டு அடுப்புகள் புகைந்தன உள்ளங்களும் புகைந்து கொண்டிருந்ததோ...

சுந்தர சர்மா தனிமையில் அமர்ந்திருக்கும் சில வேளைகளில் வானத்தை மூடிக்கொள்ளும் மழை மேகமாய் சுந்தரேசனைப் பற்றிய கசப்பான நினைவு எழும். அதனை அவர் உதறிவிடுவார். அவனை நொந்து கொள்வதில் அர்த்தமில்லை என்பது அவருக்குத் தெரியும். உலகம் கெட்டுவிட்டது; இருளில் கிடந்து பாதை தெரியாமல் தவிக்கிறது. அதற்கு ஒளிகாட்ட தன்னைப் போன்ற ஒருவனால் முடியாது, உலகம் முழுவதும் தோன்ற வேண்டும் என்று நினைத்துக் கொள்வார்.

சுந்தசுரேசன் தந்தையின் வளர்ப்பில் கூட்டில் இருக்கும் பறவையாய் இது தான் உலகம், இப்படித் தான் வாழ வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான். முட்டையில் இருந்து வெளிப்பட்ட குஞ்சாய் அவன் வெளிஉலகில் கால்வைத்த போது உலகம் அவனைப் பார்த்துச் சிரித்தது. அவன் திரும்பிப் பார்த்தான். எல்லோரும் நடந்து வந்த பாதைதான். ஆனால் வளர்ந்து கொண்டு வரும் புது உலகத்திற்குப் போகும் பாதை அதுவல்ல என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

இன்றைய உலகத்திற்கு- அதன் குழந்தைகளுக்குப்- பழைய வேதங்களும் சாஸ்திரங்களும் வழி காட்டியாக இருக்க முடியுமே தவிர, அதுவே வாழ்வாக அமைய முடியாது என்பதை அவன் புரிந்து கொண்டான். வளர்ந்து வரும் புது உலகத்திற்கு ஒரு புதிய வேகம் சாஸ்திரம் வேண்டும் என்பதை அவன் உறுதியாக நம்பினான்.

அன்று நல்ல நிலவு காய்ந்து கொண்டிருந்தது. சுந்தர சர்மா வீட்டில் அமர்ந்து வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். உலகம் மாறிக் கொண்டு வருகிறது, வானம் தன்னைப் போல, பழைய வேத சாஸ்திரம் போல-என்றும் மாருமல் இருப்பதில் அவருக்கு அதில் லயிப்பு.

தன் எதிரில் நிழலாய் இரு உருவங்கள் அசைவதை உணர்ந்து கொண்டு பார்வையைத் திருப்பினுர். அங்கே சுந்தசுரேசனும் அஞ்சலியும் அருகருகே நின்றுகொண்டிருந்தனர். அவர் அப்படியே கண்களை மூடிக்கொண்டார். மனதில் எண்ணங்கள் உரசிப் பொறி பறந்தது. அவர் இதயத்தில் அமைதியாக இருந்த அந்தச் சில விஞடிகளில் உலகமும், இருட் கிடங்கில் கிடக்கும் அதன் மக்களும், கடைசியாகதான் பூசை செய்யும் பிள்ளையாரும் வந்து போயினர்.

உலகத்தார் பொய் என்று ஒதுக்கி விட்ட வேதசாஸ்திரமும், நெறி மிக்க வாழ்க்கையும் கடவுளும் கூட அந்த நேரத்தில் அவர் மனதில் உண்மையாத் தோன்றியது. மற்ற எல்லாம் பொய். எதிரே நின்றுகொண்டிருக்கும் அவனும்-அவளும் பொய்.

அவர் கண் திறந்தார்.

சுந்தசுரேசின் புதியதொரு உலகத்து மனிதனுக அமைதியாய் முகத்தில் ஆண்மைகளை சட்ட நின்றுன். அருகே இனி மேல் அவனுடைய வாழ்வில் தனக்கும் பங்கு உண்டென்பது போல் அஞ்சலி ஒட்டிக்கொண்டு நின்றுள் இருவரையும் அமைதியாகப் பார்த்தார். தன் மகன் என்ற திரை அவர் கண்களுக்குத் தெரியவில்லை.

இருவரும் அவர் பாதங்களில் விழுந்து வணங்கினர். அவரும் எல்லோரையும் போல் தானும் ஆசீர்வாதம் செய்தார். சுந்தசுரேசனும் - அஞ்சலியும் அமைதியாக நடந்தனர்.

புது உலகத்தை நோக்கி...

அவர்கள் போனதன் பின் சுந்தரசர்மா அவர்களைப் பற்றிய நினைவையே ஒதுக்கி வைத்துவிட்டு தன் கடமைகளில் மூழ்கினுர். அவர் அடிக்கடி தனனுடைய வாழ்வில் கழிந்து விட்ட நாட்களோ அதிகம். இன்னும் இருப்பது மிகவும் கொஞ்சம் என்று எண்ணி மனதைத் தேற்றிக்கொள்வார்.

இரண்டு வருடங்கள் வந்ததே தெரியாமல் கழிந்து போய்விட்டது.

ஒரு நாள் பகற்பொழுது வானம் இருண்டிருந்தது. அவர் வேத பாராயணம் செய்துவிட்டு நிமிர்ந்த போது எதிரே அஞ்சலி கையில் குழந்தையுடன் நிற்பதைக் கண்டார். அவர் விழிகளை மூட மறந்தார். உலகம் மறைந்து போயிற்று. வேதமும் சாஸ்திரமும் தூர விலகி நின்றன. அப்போது அவருக்குச் சுந்தசுரேசன் தான் நினைவிற்கு வந்தான் அந்தக் குழந்தையின் முகத்தில் அவனின் சாயல் இருந்த போதும், அதையும் மேவிக்கொண்டு ஓர் தெய்வீகம் சுடர் விட்டுக் கொண்டிருப்பது அவர் கண்களுக்கு மட்டும் தெரிந்தது.

குழந்தை அவரைப் பார்த்துத் தன் பொக்கை வாய் காட்டிச் சிரித்தது. அந்தக் கள்ளம்புகாத உள்ளத்தின் வெள்ளைச் சிரிப்பு அவர் உள்ளத்தை என்னவோ செய்தது. அவர் கனவு கண்ட உலகம் நெஞ்சில் இருந்து மறைந்து போயிற்று அந்த இடத்தில் தெய்வத்தைப் போல் குழந்தை தோன்றி நிறைந்தது.

சுந்தர சர்மா, நிமிர்ந்து தமது இதயத்தின் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் அஞ்சலியை விழித்து நோக்கினுர். அவள் அந்தப் பார்வையால் கூசிப் போய்க் குனிந்துகொண்டாள். சுந்தசுரேசன் அவளையும் கூட்டிக் கொண்டு புது வாழ்க்கையைத் தேடி ஓடினுன். அவர்கள் தேடிய வாழ்வை இரண்டு வருடங்கள் சந்தோஷமாக அனுபவித்தனர். திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் அவன் இறந்துபோன போது அஞ்சலி கைக் குழந்தையுடன் உலகத்தில் தனியாளுள்.

அஞ்சலி அழுதழுது நடந்தவைகளைக் கூறிய போது அவர் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் நெஞ்சத்தில் பாசம் சுரந்தது; நீர் நிறைந்தது.

அவர் வெறியுடன் கத்தினுர்.

'உலகம் மட்டும் கெட்டுப் போகவில்லை. கடவுளும் செத்துவிட்டார்...''

அவர் கையை நீட்டினுர். குழந்தை தாவிக்கொண்டு வந்தது. அதன் பட்டு மேனியைத் தொட்ட போது மூலஸ்தானத்தில் இருக்கும் தெய்வத்தைத் தொட்டது போன்று உடலும் உள்ளமும் சிரித்தது, குழந்தையை அவர் கொஞ்சினுர்.

அஞ்சலி உலகத்தின் இருள் எல்லாம் விலகியது போல் மனம் திறந்து சிரித்தாள்.

உண்மைப் பிராமணனுய், உலகத்தையே பரிபாலிக்கிற மேதையாய் ஆசார சீலராய் வாழ வேண்டும் என்று நினைத்த சுந்தர சர்மா அன்றிலிருந்து மனித இதயம் படைத்த உயர்ந்த மனிதனுகவே தமது வாழ்வை அமைத்துக் கொண்டார்.

பிள்ளையாரை மறந்து விட்ட அவர் இதயத்திற்கு வீட்டில் கடவுளிலும் மேலாய் ஓர் குழந்தை இருந்தது. ஆசாரம் கெட்டுவிட்ட அவர் பிள்ளையாருக்குப் பூசை செய்வதையும் விட்டுவிட்டார். அந்த வேதனையையும், சுந்தசுரேசனை இழந்துவிட்ட துயரத்தையும் குழந்தையின் முகத்தைப் பார்த்துத் தேற்றிக்கொள்வார்.

வானத்தில் இருள் முற்றுகக் கவிழ்ந்துவிட்டது. சுந்தர சர்மா நிமிர்ந்து பார்த்தார், எல்லாம் இருளில் மூடிக்கிடந்தது. அந்த இருளில் அவர் எழுந்து நின்றுர். உலகத்தை மமதையோடு பார்த்தார். "உண்மையை மதிக்காத இந்த உலகத்தை நானும் மதிக்கவில்லை'' என்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

அவர் அமைதியாக நடந்தார். இருளில் ஒளியாய் பாதை தெரிந்தது.

(யாவும் கற்பனை)

# சங்கப் பலகை

## 'கொழும்புப் பெண்'

ஆசிரியர்: பொ. சண்முகநாதன்
வெளியீடு: கலைச்செல்வி, சுன்னுகம்.
விலை: 1-50.

திரு. சண்முகநாதன் அவர்கள் ஈழத்துப் பத்திரிகைகளில் அவ்வப் போது எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகள் நூல் வடிவுபெற்று, கொழும்புப் பெண் ஆகி வெளிவந்துள்ளது. 98 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் சிரிக்கக் கூடிய கட்டுரைகளில்லாமலில்லை முதற் கட்டுரையாகிய கொழும்புப பெண்ணும்,—மற்றும் கொழும்புப் பெண் வேண்டாம்... நாக்கு வளைக்கும் நல்லம்மா—இலவச ஆலோசகர்கள்—பாரதி இன்றிருந்தால்... ஆகிய கட்டுரைகளும் தரும் தரம்மிக்க நகைச்சுவைக்காக இந்நூலைப் படிக்கலாம். இப்பாத்திரங்களை எங்கேயோ கண்டது போல, நம்முடன் வாழ்பவர் போன்ற பிரமையேற்படும் படியாக அமைந்து இலக்கியத்திற்கு ஓர் புது வழி சமைத்து விட்டன.

நாடோடி எழுதிய 'பிழைக்கும் வழி' என்ற நூலைப்படித்து சுவைத்த வாசகர்கள், பின்பு நல்ல நகைச்சுவை இலக்கியம் பெற்றது குறைவேயாம். ஆனால் அக்குறையை கொழும்புப் பெண்'ணி லுள்ள மேற்குறிப்பிட்ட கட்டுரைகள் தீர்க்கின்றன என்பது புகழுரைகளல்ல. பலரும் தொடாத பாதையைத் தொட்டுச் செல்லும் சண்முகநாதனுக்கு, வளர்ச்சிக்கு முதனூலாக இது அமைகின்றது அது மட்டுமல்ல ஈழத்தின் முதலாவது நகைச் சுவைக்கட்டுரைத் தொகுப்பு என்ற பெருமையையும் பெற்று—'கொழும்புப் பெண்' சண்முகநாதன் அவர்களுக்குப் பெருமை, சேர்க்கின்றது.

—புதுமைலோலன்

## வங்கியாளர் பயிற்சியில் தமிழர் புறக்கணிப்பு

வங்கியாளர் பயிற்சி நிலையத்தில் தமிழர்களை ஒதுக்கும் முயற்சியைக் கண்டித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் வங்கி ஊழியர்கள் ஆட்சேபம் தெரிவித்து ஒரு மகசர் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

வங்கியாளர் பயிற்சி நிலையத்தில் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் பயிற்சியளிக்கப்படுவதுடன், ஆங்கில மூலம் பயிற்சி பெறுபவர்களுக்கு சிங்கள அறிவும் வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப் பட்டுள்ளது. இந்த நடைமுறையை மாற்றி தமிழில் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும், ஆங்கில மொழி மூலமான பயிற்சிக்கு 'சிங்களம் அல்லது தமிழ்' தெரிந்திருக்க வேண்டும் என்று நிபந்தனையிடுமாறும் வங்கி ஊழியர்கள் பயிற்சி நிலையச் செயலாளரிடம் கொடுத்துள்ள மகசரில் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை பத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய அரசாங்க வங்கித் தமிழ் ஊழியர்களுடன் தனியார்நிறுவனவங்கிகளின் தமிழ் ஊழியர்களும் இம் மகசரில் ஒப்பமிட்டுள்ளார்கள். பயிற்சி நிலையத்தில் தற்பொழுது பின்பற்றப்படும் முறை மாற்றியமைக்கப்படாதுவிடின் தமிழ் இளைஞர்கள் வங்கித் தொழிலிலிருந்து ஒதுக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இணுவில் கந்தசுவாமிகோயில் திருப்பணி

யாழ்ப்பாணம் இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி கோயிலை புதுப்பித்துப் புனருத்தாரணம் செய்வதற்கான முயற்சிகளை ஆலய தர்மகர்த்தா சபையினர் மேற்கொண்டிருக்கின்றனர். கலைப் பெருமை வாய்ந்த இக் கோயிலின் மூலஸ்தானம் இடிக்கப்பட்டிருப்பதாலும், மஞ்சம் சிதைந்து கிடப்பதாலும் இவற்றைத் திருத்துவதற்கு போதிய நிதி தேவைப்படுகிறது.

சைவப் பெரு மக்களிடம் நிதி வசூலித்து புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கு ஆலய பரிபாலனசபை ஏற்பாடுகள் செய்து வருகிறது.

தர்மகர்த்தா சபையில் திருவாளர்கள்: சு. இராமலிங்கம், க. அம்பலவாணர், வ. நடராசா, இ. நன்னித்தம்பி, வ. சிவபாக்கியம் ஆகியோர் உள்ளனர்.

## நம்மிடம் சரக்கு உண்டே!

'தாமரைத்தீவான்'

நம்மிடத்தே சரக்குண்டு நற்சரக்கு
நாமவற்றைப் பயன்படுத்தி ஆகவேண்டும்
சும்மா நம் புகழ்பற்றிப் புளுகல் வேண்டாம்
சொல்லெல்லாம் செயலாக மாறல் வேண்டும்
அம்பா வென்றழையாமல் 'மாதா' வென்றுல்
அழகில்லை நம்பவர்க்கு அமுதாகாது
இம்மியும் யாம் இரவலது பெறுமல் என்றும்
இருப்பதற்கு முயலுவதே இன்ப வாழ்வு

சொந்தமெது? இரவலெது? என்றறிந்து
தூய தமிழ் கலப்பின்றி எழுதிப்பேசி
வந்த மறைமலை அடிகள், வி. க. சென்ற
வழியினிலே செல்லுவதை வழக்கமாக்கி
இந்த நாள் விஞ்ஞானக் கருவிகட்கு
ஏற்ற சொல் பழந்தமிழில் இல்லை யென்றுல்
அந்தமிழில் புதுச் சொர்கள் அமைத்தவற்றை
அனைவருமே கைக் கொண்டால் அருமையன்றே?

ஞாயிறுண்டு, பரிதியுண்டு 'சூரியன்' ஏன்?
நல்ல மதி, திங்களுண்டு 'சந்திரன்' ஏன்?
தீயிருக்க 'அக்கினி' ஏன்? விண்மீன் கண்ணைச்
சிமிட்டுகையில் 'நட்சத்திரங்கள்' ஏனோ?
வாயினிக்கும் கோள் இருக்கக் 'கிரகந்தான்' ஏன்?
வானிருக்க 'ஆகாயம்' வண்ண மீன்கள்
போயிருக்கும் ஆழிக்குச் 'சமுத்திரம்' பார்,
புவியிருக்கப் 'பூமி' யெலாம் தேவை தானே?

# சிந்தனையில் மலர்ந்த செயலாக்கம்

அங்கம் 12

பல மாதங்கள் கட்டிலிலே தனிமையில் புரண்டு கொண்டிருந்த ராமச்சந்திரன் சிந்தித்துச் சிந்தித்து வாழ்க்கையைச் சீராக்கும் பணியில் ஈடுபடலானார். சிந்தனை காட்டிய பாதை செம்மையான தாகத்தோன்றியது. தன் வாழ்வை வளப்படுத்துவதுடனல்லாது தம்மைச்சூழ்ந்தவர்களின் வாழ்வையும் புதுப்பிக்க உரமிடலானார். உதவி கோருவோரின் தன்மை அறிந்து உதவலானார்.

அவருடைய உள்ளத்தில் பொய்மை மறைந்தது. உண்மை வளர்ந்தது. மனம் வாக்குக்காயம் மூன்றுமே ஒருமித்த செயல் புரிந்தன.

உள்ளத்தால் பொய்யா
தொழுகின், உலகத்தார் உள்
ளத்தி
லெல்லாம் உளன்

என்ற வள்ளுவன் வாக்குக்கொப்ப உலகம் ராமச்சந்திரனைப் போற்றத்தலைப்பட்டது.

படுக்கையை விட்டு எழுந்ததும்சென்னையிலுள்ளதென்னிந்திய சினிமா பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தினரையும் வேறு சிலரையும் தமது இல்லத்துக்கு அழைத்தார். சென்னை பரங்கி மலையிலிருந்து பூந்தமல்லி செல்லும் பாதையிலிருக்கும் ராமாவரம் என்னும் கிராமத்தில் 'எம். ஜி. ஆர். தோட்டம்' என்று ஒரு தோட்டம் இருக்கிறது. இத்தோட்டத்திலே தான் அன்று மகிழ்ச்சி விருந்துக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கால் பூரணமான குணமடைந்து விட்டதை அறிவித்து தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டவே அவ்விருந்தினை எம்.ஜி. ஆர். நடாத்தினார். டி, வி. எஸ். உல்லாசப் பிரயாண பஸ் வண்டிகள் எங்களை ராமவரத்திலுள்ள தோட்டத்துக்கு எடுத்துச் சென்றது.

## எம். ஜி. ஆர். தோட்டம்

பத்து ஏக்கராவுக்குமேலுள்ள அத்தோட்டத்தில் வயல்களும் உண்டு. தென்னை, வாழை, போன்றவற்றுடன் பழமரங்கள், மரக்கறிச் செடிகள், பூங்கன்றுகள் முதலானவும் இருந்தன. நடுவே இருமடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றும் இருந்தது. கட்டிடத்தின் வடது புறமாகச் சென்றால் ஒரு சிறு மிருகச்சாலை இருந்தது. புலிக்குட்டிகளும் அங்கே இருந்தன.

எம். ஜி. ஆர். அவர்களின் தெய்வமான அவருடைய அன்னை சத்தியா அம்மையாருக்கு அங்கே ஒரு ஆலயமும் கட்டப்பட்டிருந்தது. வீட்டின் பின் புறமாக படங்களைத் திரையிட்டுப் பார்க்கக் கூடிய வசதிகளடங்கிய படமாளிகையும் உண்டு. அதனருகில் பெரிய நீச்சல் தொட்டியும் அமைக்கப்பட்டிருந்தது.



''பழைய பாதையை மறக்கலாகாது...''

இல்லத்தின் கீழ்-பூமிக்கடியிலும் ஒரு மண்டபம் அப்போது கட்டப்பட்டு வந்தது. அங்கேதான் ஒரு வாசிகசாலையை அமைக்க எம். ஜி. ஆர் திட்டமிட்டிருந்தார்.

## ஒரே குடும்பத்தினர்

மகிழ்ச்சி விருந்தை மனநிறைவுடன் உண்டு, கருத்துக்களைக் கண்ணியமுடன் பரிமாறிக்கொண்டு விடை பெற்றுக் கொண்டோம். டி. வி. எஸ். வண்டிகள் எங்களனைவரையும் அவரவர் இல்லங்களுக்கு எடுத்துச் சென்றது.

'எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஒரே குடும்பத்தினர்' என்ற கருத்தை எம். ஜி. ஆர். வலியுறுத்துபவர்.

தங்கவேலு, இலட்சிய நடிகர் ராஜேந்திரன், எம். என். ராஜம், டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி முதலானோர் அன்று கலைஞர்-பத்திரிகை எழுத்தாளர் சந்திப்புக் கூட்டத்தில் பங்கு கொண்டிருந்தனர். மொட்டை மாடியில் சிற்றுண்டி விருந்து முடிந்ததும் தியேட்டரில் கருத்துரையாடல் நடைபெறத்தொடங்கியது. நடிகர்களும் திரு. சாமியும் பேசினார்கள்

சாமி அவர்கள் டைரக்ஷன் துறையிலுள்ள பல தரப்பட்ட சிக்கல்களை எடுத்துக் கூறினார். தொடர்ந்து பேசிய ராஜேந்திரன் அவர்கள் நடிகர்களுக்குள்ள கஷ்ட நஷ்டங்களை எடுத்து ஆராய்ந்தார்.

'பராசக்தி'யில் சிவாஜி கணேசனும் தானும் பிரவேசிக்குமுன்னர் சென்னை நகரத்தில் வாழ்ந்த வாழ்க்கையை விபரித்தார், திரு.

## நட்சத்திர மண்டலத்தில் 4 X 8 மாதங்கள்

மகிழ்ச்சி விருந்தின் போது இதேகருத்தை வலியுறுத்திய ராமச்சந்திரன் அவர்கள் மாதம் ஒரு முறை ராமாவரத்தில் பத்திரிகை எழுத்தாளர்கள்- கலைஞர்கள் சந்திப்புக் கூட்டங்களை ஏற்பாடுசெய்யலானார்.வாய்க்கு உருசியான விருந்துடன் கருத்துக்கும் கலைக்கும் விருந்தான கருவூலங்களும் இக் கூட்டங்களில் கிடைத்தன. பூரண பலன் பெறுவதற்கு முன்னர் நமது எழுத்தாளச் சகபாடிகள் எல்லாவற்றையுமே கெடுத்துக் கொண்டனர்.

ராமாவரம் தோட்டத்தில் அன்று 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி'க்கான சில வெளிப்புறக் காட்சிகள் எடுக்கப்பட்டன. கூட்டத்துக்குச் சென்ற எங்களை தோட்டத்தின் முன்புறம் நின்ற கோமாளி வேடதாரி வரவேற்றார். முகம் முழுவதும் கறுப்பு வர்ணம் பூசப்பட்டிருந்தது; வாயடியில் பெரிய வெள்ளை வர்ண வளையம் தடவப்பட்டிருந்தது உடையும் கறுப்பு. யாருமே அவரை சட்டை செய்யாமல் போகவே அவருக்கு கோபம் வந்துவிட்டது. 'கலைஞன்' பத்திரிகை உதவி ஆசிரியரான முத்து அவர்களை அணுகி, 'ஏண்டா பொடிப்பயலே உனக்கு மாடா கண் கொழுத்துப் போச்சு' என்று ஒரு குத்துக் கொடுத்தார். அவருடைய குரலை அப்போதுதான் கவனிக்க முடிந்தது. நமது டணார் தங்கவேலுதான் கோமாளி வேடத்துடன் நின்றிருந்தார்.

ராஜேந்திரன். இன்று உப்பரிகையில் உல்லாச வாழ்வு வாழ்ந்தாலும் அன்று ஆதரவற்று வாழ்ந்த வாழ்க்கையை மறக்கக் கூடாது என்று கூறினார். அவருடைய பேச்சிலே உருக்கம் நிறைந்திருந்தது. உணர்ச்சி வசப்பட்டுப் பேசலானார்.

## எம். என். ராஜம் திணறினார்

இலட்சிய நடிகரின் பேச்சின் பின்னர் தங்கவேலுவை மேடைக்கு வரும்படி எம்.ஜீ.

## கலைஞர்-எழுத்தாளர் இணைப்பு கூட்டங்கள்

ஆர். கூவி அழைத்தார். ஒப்பனையைக் கழற்றிவிட்டுமாற்றுடையற்றவராக நின்ற தங்கவேல் மேடைக்குவர மறுத்து விட்டார். எம். ஜி. ஆர். மாற்றுடை தருவதாக எவ்வளவோ கூறியும் தங்கவேல் அறையை விட்டு வெளியே தலைகாட்டவில்லை. தமது இல்லத்திலிருந்து மாற்றுடை வந்த பின்னரே தங்கவேல் மேடைக்கு வந்து சேர்ந்தார்.

எம்.என். ராஜம் அவர்களை மேடைக்கேற்றி அறிமுகப்படுத்திவைத்த எம். ஜி. ஆர். அவரைப் பேசும்படி பணித்தார். சுருக்கமாகப் பேசி முடித்த ராஜத்திடம் பத்திரிகை நண்பர்கள் சரமாரியாகக் கேள்விக்கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தனர். ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்ட கேள்விகளுக்கு ராஜத்தினால் பதிலளிக்க முடியவில்லை. திணறலானார். ஒரு கொம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையின் உதவி ஆசிரியர்களுள் ஒருவர், 'குடும்பப் பெண்கள்சினிமாவில்தோன்றலாமா?' என்ற கேள்வியைக்கேட்டார். இதற்கு பதிலளிக்க ராஜத்தால் முடியவில்லை.


எம். ஜி. ஆர்., கேள்விகேட்டவரிடமே, 'குடும்பப் பெண்கள் என்றால், அதற்குரிய இலட்சணம் என்ன?' என்று கேட்டார். இதிலிருந்து விவாதங்கள் தொடரலாயின. அர்த்தமற்ற இந்த விவாதம், எம். ஜி. ஆர். அவர்கள் நல்ல எண்ணத்துடன் தொடங்கிய கலைஞர் எழுத்தாளர் இணைப்புக் கூட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

## இருப்பிட மாற்றம்

ஒரு முக்கியமான பணியினை முடித்து வைக்கும் நோக்கோடு தமிழ

'ஈழத்தரசன்'

கம் சென்ற நாம், வேறுபல காரணங்களையும் சேர்த்துக் கொண்டமையினால் தமிழகத்தில்ஏறத்தாழ 32 மாதங்களைச் செலவிட வேண்டியிருந்தது. ஆகவே ஹோட்டல் வாழ்க்கை கட்டுப்படியாகாத காரணத்தினால், வாடகைக்கு ஒரு இருப்பி



''கண்ணு கொழுத்து போச்சுதாடா...''

டத்தை ஏற்பாடு செய்ய வேண்டியதாகி விட்டது.

தேனாம்பேட்டையிலுள்ள போயிஸ் சாலை 10-ம் இலக்க இல்லத்தில் ஒரு பகுதிநமக்கு வாடகைக்குக் கிடைத்தது. பழம் பெரும் தெலுங்கு நடிகையான கமலா கோட்னிஸ் என்பவரின் சகோதரரான பாபு அவர்களுடையது அவ்வில்லம். முன் புறமிருந்த மாடிக்குமேல் பிரசித்தி பெற்ற பரதநாட்டிய தம்பதிகளான நடராஜ்—சகுந்தலா குடியிருந்தனர்.

இரவு வேளையில் தான் நமது குடியிருப்பு மாற்றம் நிகழ்ந்தது. ஆகவே சுற்று வட்டாரத்தை அவ்வளவாகக் கவனிக்கமுன்னர் வாய்ப்புக்கிடைக்கவில்லை. காலையில் கண் விழித்ததும் வளவைச் சுற்றி ஒருமுறை நோட்டம் விட்டோம். பின்புற வளவினுள் சில குழந்தைகளுக்கு வெந்நீரில் குளிப்பாட்டிக் கொண்டு ஒரு குள்ள உருவம் நிற்பதைக் கண்டோம். நன்கு பழக்கப்பட்ட குரலாதலால் கூச்சமின்றி எட்டிப் பார்த்தோம். நகைச்சுவை நடிகர் எஸ். ராமராவ் காட்சி கொடுத்தார்.

முன்பக்கமாக கண்ணோட்டம் விட்டபோது அங்கே போராச்சரியங்கள் பல காத்துக் கிடந்தன. எங்கள் இருப்பிடத்தின் நேரெதிர்ப்புறத்தில் இருந்த வீட்டுக்கு முன்னே ஒரு ஓலைவேய்ந்த கொட்டகைஇருந்தது. காலைவேளை-அங்கே பலகுண்டர்கள்-தப்பு தப்பு—முண்டர்கள் ஒருவரை ஒருவர் முண்டிக்கொண்டு, நிற்பதைக் கண்டோம்.

அடுத்து இருக்கும் வீட்டின் முன்படிக்கட்டில் இன்னுமொரு கறுத்த உருவம் சாய்ந்திருந்தது. அந்த உருவம் கன்னங்

(13-ம் பக்கம் பார்க்க)

# எமது விமர்சனம்

சினிமாஸ் அளிக்கும்:

## ஷேரா

[இந்தி]

தயாரிப்பு: சாந்தாராம்

மத்திய இந்தியாவின் வனாந்தரப் பகுதியில் வாழும் இரு சமஸ்தானாதிபதிகளுக்கிடையில் பண்டு தொட்டு இருந்துவரும் போட்டி பொறாமைகளையும் அதன் விளைவுகளையும் நிலைக்களனாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதைதான் 'ஷேரா'. ஆண் வாரிசு அற்ற ஒரு சமஸ்தானாதிபதி தனது ஒரே மகளான அங்காராவை வீர விளையாட்டுகளில் விட்டுத் திறப் பயிற்சி அளித்து வருகிறார். பெண், பெண்மையுடன் வளர வேண்டும் என்று உரிமைக் குரலெழுப்பும் அவளின் தாய் அதற்காகவே தன் உயிரைத் தத்தம் செய்கிறாள். தாயின் தியாகத்தின் பின் அங்காரா பெண்மைக் கோலம் பூணுகிறாள்.

ஜென்மப் பகைவரான அடுத்த சமஸ்தானாதிபதியின் மகன் விக்ரமும் அங்காராவும் அடிக்கடி சந்திக்கின்றனர். போட்டி மைதானங்களிலேதான் இருவரும் சந்தித்து வந்ததனால் பகைமையே வளருகிறது. ஆனால் டகைமைஉணர்ச்சியே இருவருக்கிடையிலும் உள்ள பருவத் துடிப்பைத் தூண்டிவிட்டு காதலர்களாக்கி விடு

வேறோர் சமஸ்தானாதிபதிக்கு அங்காராவை மணம் முடித்து வைக்கின்றனர். அவனோ அங்காராவின் குடும்பத்தை வஞ்சம் தீர்க்க எண்ணியிருந்தவன்-சிதனமாக அளிக்கப்பட்ட, அங்காராவின் பரம்பரை உடமையான கல்யாண ஊஞ்சலை அவள் தலைமேலேற்றி பாலைவனத்தில் தனிவழி நடாத்திச் செல்கின்றான்.

அங்காராவின் தந்தையால் தண்டனைக்குள்ளான விக்ரம் குற்றுயிராக வழியில் கிடக்கிறான். தண்ணீர் கேட்டுக் கதறிய அவனுக்கு, அவனை யாரென அறியாமலே, கணவனின் சொல்லையும் மீறி, உதவச் செல்கிறாள் அவள். கொடுமைக்காரக் கணவனின் துப்பாக்கி அவளுடைய முதுகைத் துளைக்கிறது. காதலன் வீழ்ந்து கிடக்கும் இடத்துக்கே அவளுடைய உயிரற்ற உடலும் உருண்டு செல்லுகின்றது. அவள் தூக்கிவந்த ஊஞ்சலும் அவ்விருவரண்டையே போய் விழுகிறது. இருவருடைய கைகளும் அவ்வூஞ்சலில் கிடக்கின்றன.

உயர்தரப் படங்களைத் தயாரித்து வெளியீடுவதில் பெயர் பெற்ற டைரக்டர் சாந்தாராமின் தரம்மிக்க தயாரிப்பாக 'ஷேரா' திகழ்கிறது. அங்காராவாக வருபவர் சந்தியா; ஆணைப் போல் அனாயாசமாகத் துள்ளும் போதும், பெண்மைக்குரிய பெருமையுடன் நாணிக் கோணி மாறும் போதும் அவருடைய நடிப்பு தரமாக விருக்கின்றது. புதுமுகமான பிரசந்த் விக்கிரமாக நடிக்கிறார். அவருக்கு இன்னும் கூச்சம் தெளிவடையவில்லை என்பதை சிற்சில இடங்களில் காண முடிகிறது.

ஈஸ்ட்மென் வர்ணத்தில் தயாரிக்கப்பட்டுள்ள 'ஷேரா' நல்ல இசைப் பொலிவும் இயற்கைச் சிறப்புக் காட்சிகளும் கொண்ட உயர்தரத் தயாரிப்பாகும். மொழி புரியவில்லையே என்ற கவலைக் கிடமில்லாமல் டைரக்டர் சாந்தாராம் கதையை வெகு தெளிவாக நகர்த்தியுள்ளார்.

——நாதன்.




# எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி இலங்கை வருகை ஞாபகார்த்த விநோத சினிமாப் போட்டி

இப் பக்கத்திலுள்ள விசேட கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். சரியான விடை அனுப்புபவர்களின் கூப்பன்களிலிருந்து முறையே ஆறு பரிசுக்குரிய விடைகள் பொறுக்கியெடுக்கப் படும்.

## பரிசுகள்:

1 வது பரிசு—

6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்

2 வது பரிசு—

4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்

3 வது பரிசு—

3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்

மற்றும்

3 ஆறுதல் பரிசுகள் —ஒவ்வொன்றும் 2 மேல் வகுப்பு டிக்கட்டுகள் வீதம் வழங்கப் படும்.

பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் 'எங்க வீட்டுப் பிள்ளை' என்ற தங்க எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தங்க மூடியுடன் கூடிய புதிய பிளாட்டினம் பேனா ஒவ்வொன்றும் விசேடப் பரிசாகக் கொடுக்கப்படும்.

## முடிவுத் தேதி 3—12—65

பரிசு பெற்றோர் விபரமும், சரியான விடைகளும் 12—12—65 சுதந்திரனில் வெளிவரும்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல்மூலையில் 'எங்க வீட்டுப் பிள்ளை' இலவசப் போட்டி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்.
கலைப்பூஞ்சோலை.

........................இவ்விடத்தில் கத்தரிக்கவும்........................

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ல | க | ம் | ■ | 3 | | ■ |
| 4 ரை | | ■ | ■ | 5 | ள | ங் | 6 |
| ப் | ■ | ■ | 7 | து | ரி | | மா |
| 8 ப | | | ரி | ■ | ■ | ■ | |
| ட | ■ | 9 | | 10 ஜா | 11 | 12 | ■ |
| ம் | 13 | ■ | 14 க | | | | 15 ச |
| ■ | 16 | | ■ | ■ | ர் | க | |
| 17 ர | | | ரா | | ■ | | |

முழுப் பெயர்........................................

முகவரி........................................

........................................

நீங்கள் படம் பார்க்க விரும்பும் 'சினிமாஸ்' படங்களைத் திரையிடும்............

........................ ........................
தியேட்டரின் பெயர் ஊர்

........................
கையொப்பம்

........................இவ்விடத்தில் கத்தரிக்கவும்........................

## இடமிருந்து வலம்

1. எம். ஜி. ராமச்சந்திரன் மக்களிடத்தில் பெற்றுள்ள செல்வாக்கினால் ''மக்கள்......'' என்ற பெயரைப் பெற்றார்;

3. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் பாடல் எழுதியிருக்கும் கவிஞர்.

4. குதிரையின் கால் குளம்பு மாறிக் கிடக்கிறது.

5. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் எம்; ஜி. ஆருக்குக் கிடைத்துள்ள பாகம்.

7. முன்பு திரைவானில் மின்னும் நட்சத்திரமாகத் திகழ்ந்து இன்று ஒளியிழந்து விட்ட நடிகை உருமாறிக் கிடக்கின்றார்.

8. 'எங்க வீட்டுப் பிள்ளையில்' எம். ஜி. ஆரின் சகோதரியாக வருபவர்.

9. எங்க வீட்டுப் பிள்ளை" கதாநாயகி.

14. மாறிக் கிடக்கும் இதன் துணை கொண்டு எம். ஜி. ஆர். நன்மை புரியப் பார்க்கிறார்.

16. இறந்து போய்விடு.........

17. தலை சிறந்த குணசித்திர நடிகர்.

## மேலிருந்து கீழ்

1. வெகு பலருக்கு இதை விட்டால் பொழுது போக்கும் வேறு எதுவுமே கிடையாது;

2. இது ஒரு வகை சங்கீதம்;

3. சிங்கம்.

5. இதோ இருப்பது;

6. நாகேஷ் ஒரு.........

10. ஒரு வகைப் பாத்திரம்.

11. இப் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்குள்ள சினிமா அறிவைப் பரீட்சிக்க இப்போட்டி மாறிப்போயிருக்கும் இதுவாகிறது.

12. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் எம். ஜி. ஆர். உணவினை உண்ணும் விதத்தினால் அவருக்கு இது ஏற்படாமல் போனது ஆச்சரியம்தான்.

13. சினிமா வானில் பலருடைய புகழ் அடிக்கடி மாறிக் கிடக்கும் இப்படியாகி விடுகின்றது.

15. வருங்காலத்தில் இவள் பெரும் புகழீட்டுவாள் என்பதில் ஐயமில்லை.



வஞ்சியின் வாயும் அசையவில்லை, வாலிபன் இதழும் துடிக்கவில்லை. மிஞ்சிய ஏக்கம் குடிகொள்ள இவ்விளசுகளுக்கு நேர்ந்ததென்ன? 'எங்க வீட்டுப் பிள்ளை' நாயகனும்-நாயகியும்.

## எம். ஜி. ஆருக்கு விபத்து நேராத காரணம்

கடந்த வாரம் இதே பக்கத்தில் கொடுக்கப்பட்ட புதிருக்கான விடை:—

எம். ஜி. ஆர், சரோஜாதேவி குழுவினர் பிரயாணம் செய்த மோட்டார் வண்டி, வெளியூர்களிலிருந்து மருதானை நோக்கிச் செல்லும் ரயில் வண்டிகளுக்கான இருப்புப் பாதையின் மேலேதான் நின்றிருந்தது. ஆனால் புகை வண்டியோ மருதானையிலிருந்து வெளியூர்களுக்குச் செல்லும் தண்டவாளத்தின் மேல் வந்து கொண்டிருந்தது. ஆகவே விபத்து நேர வழி எதுவுமில்லை. 'கேட்' திறக்கப்பட்டதும் பிரயாணம் தடையின்றி நடைபெற்றது.

## நாடக விழாவில் 6 நாடகங்கள்

நவம்பர் 28-ல் செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் தேசிய கலைப் பேரவை, உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் எம். திருச்செல்வம் தம்பதிகள் முன்னிலையிலும்- ஏ. இளஞ்செழியன் அவர்களினது தலைமையிலும் நடாத்தவிருக்கும் நாடக விழாவில் கொழும்பில் உள்ள ஆறு மன்றங்களின் நாடகங்கள் இடம் பெறுகின்றன.

அவையாவன:—

திருப்பாலை நாடக மன்றத்தினரின் 'தங்கத் தாய்', கலைச் செல்வன் புரொடக்ஷன்ஸ் 'ஒருத்தி சொன்னாள்' அமரகவி பாரதியார் நாடக மன்றத்தினரின் 'பதில் சொல்', எ. நெய்னா குழுவினர் அளிக்கும் 'நவீன அசோகன்' சிபா புரொடக்சன்ஸ் 'முல்லைத்தீவு', தேசிய கலைப் பேரவையின் 'நீதியின் நிழல்'.

## தமிழகம் செல்கிறார்



நாடகத்தையே தமது மூச்சாகக் கொண்டு அத்துறைக்காக அயராது பாடுபட்டு வருபவர் யாழ்ப்பாணம் நவாலியூரைச் சேர்ந்த இளைஞர் திரு. எஸ். அருமைநாயகம். தமது 16 வது வயதிலேயே நாடகக் கலையில் நாட்டங்கொண்ட இவர் இதுவரை மொத்தம் 35 நாடகங்களில் நடித்திருக்கிறார். பலதரப்பட்ட குணசித்திர பாகங்களைத் தாங்கி நடிப்பதுடன் நாடகங்களைத் தயாரிக்கவும் இவரால் முடியும்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் நாடகங்களிலும் தோன்றியிருக்கும் இவர் தமிழகத்தின் டி. கே. எஸ். நாடகக் குழுவுடன் தொடர்புடையவர். தமிழகத்தில் சில காலம் இவர் இருந்திருக்கிறார். மீண்டும் தமிழகம் சென்று மக்கள் திலகம் எம். ஜி. ஆர். போன்றவர்களின் உதவியைப் பெற்று நாடகத்துறையிலும் சினிமாத் துறையிலும் ஈடுபாடு கொள்ள விருக்கிறார்.

## செயலாக்கம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கரேலென்றிருந்தது. தலைமயிர் கட்டுக் கடங்காமல் பறந்து போய்க்கிடந்தது. வளவைப் பெருக்கிக்கொண்டிருந்த ஒரு சிறுமிக்கு, கூட்டும் முறையைக் கூறிக் கொண்டிருந்தது.

அவ்வுருவத்தின் சொற்களுக்கு அச்சிறுமி செவிசாய்க்கவில்லை என்பதை உணர்ந்ததும் தானாகவே எழுந்து துடைப்பத்தைப் பறித்துக் கூட்டிப் பெருக்கத் தொடங்கியது.

கரகரப்பும் மென்மையும் இடையிடையே இழையோடிய குரலுக்குரிய அக்கறுத்த தடித்த உருவத்தைக் கண்டதும் பிரமித்துப் போய்ச் செயலற்று நின்றோம்;

## "மூடன் முத்து"வின் கதை

'மூடன் முத்து' அடுத்த மாத ஆரம்பத்தில் எண்டர் டெயின் மெண்ட்ஸ் திரைகளுக்கு வருகிறது. இதே படத்தை 1961 ம் ஆண்டில் ஜுபிட்டர் பிக்சர்ஸ் தயாரித்து வந்தனர். சோலைமலை எழுதிய இச்சுவையான கதை இறுதியில் பத்மினி பிக்சர்ஸ் உரிமையாளர் பந்துலுவிடம் வந்து சேர்ந்தது. இங்கு சினிமாஸ் திரைகள் இப்படத்தைத் திரையிட விருந்தன. இப்படத்தைத் திரையிடும் அதிஷ்டம் எண்டர் டெயின் மெண்ட்ஸ் திரைகளுக்கே கிடைத்திருக்கிறது.

# திரு. பீட்டரின் சேவை மீண்டும் நம்மவர்க்குத் தேவை

## பாராட்டுக் கூட்டத்தில் பிரமுகர்கள் கருத்து

யாழ்ப்பாணம் மாநகர சபையில் சுண்டிக்குழி வட்டார உறுப்பினராக இருந்து அண்மையில் தமது பதவியைத் துறந்தவரான திரு. பீட்டர் சோமசுந்தரம் கடமையே கண்ணுனவர் என்பதை மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அன்னுருக்குக் கொடுக்கப்பட்ட பாராட்டுக் கூட்டத்தின்போது ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரான திரு. சோமசுந்தரத்திற்கு நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் சகல கட்சியினரும் கலந்து கொண்டனர். அவர்கள் வழங்கிய பாராட்டுரைகளிலிருந்து தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மாநகர சபையில் எங்ஙனம் பணியாற்றுகிருர்கள் என்பது தெளிவாகியுள்ளது.

பீட்டர் மாஸ்டரின் புறாணி விஜயம் குறித்து சுதந்திரன் செய்தி வெளியிட்டது வாசகர்கள் அறிந்ததே. பீட்டர் மாஸ்டர் தமது யாழ்ப்பாண மாநகர அங்கத்துவ பதவியை துறந்ததிஞல் சுண்டிக்குழி வட்டாரத்திற்கு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக சமீபத்தில் இடைத் தேர்தல் ஒன்று நடைபெறவிருக்கும் சந்தர்ப்பத்தில், தமிழரசுக் கட்சி, சுண்டிக்குழி வட்டாரத்திற்கு வேட்பாளராகத் தந்து, சுண்டிக்குழி மக்களால் மாநகர உறுப்பினராகத் தெரியப்பட்ட திரு. பீட்டர் சோமசுந்தரம் மாநகரசபை விடயங்களில் எவ்விதம் பண்புடன் நடந்து கொண்டு வட்டார மக்களினது கண்ணியத்தைக் காப்பாற்றியிருக்கிருர் என்பதை சுண்டிக்குழி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், அன்னுர் புறாணிக்குச் செல்வதை முன்னிட்டு யாழ். மாநகரசபை நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரைகளைக் (குறிப்பாக எமது எதிர்க் கட்சிப் பிரமுகர்கள் கூறிய) இங்கு பிரசுரிக்க விரும்புகிருேம்.

### திரு. துரைராசா பேச்சு

பொன்னம்பலம் கட்சிப் பிரமுகரும் முன்ஞள்மாநகர முதல்வருமான திரு. தா. ச. துரைராசா கூறியதாவது:-

"திரு. பீ. ச. சோமசுந்தரம் அவர்கள் இந்நாட்டைவிட்டும், இச்சபையை விட்டும் செல்வது நாட்டுக்குப் பெரு நட்டமாதலால் உண்மையாகவே நான் பெரிதும் மனவருத்தப்படுகிறேன். யாருக்கும் கஷ்டத்தை உண்டாக்காது, தன் கருமமே கண்ணுயிருந்து சளையாது ஓயாது உழைத்த ஒருவர் இச்சபையை விட்டுச் செல்வது யாழ்ப்பாண நகருக்கே பெரு நட்டமாகும். தன் அலுவல்களில் கண்ணும் கருத்துமாயிருந்து யாழ்ப்பாணத்திற்கும், சபைக்கும் அநேக வருடங்கள் சேவை செய்திருக்கும் திரு. பீ. ச. சோமசுந்தரம் அவர்கள் எம்மை விட்டுப் பிரிவது எமக்கெல்லாம் துன்பத்தையே தருகிறது. ஆயினும் அவர் தனது குடும்ப நலனுக்காக நாட்டை விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதால் அவரை மகிழ்ச்சியுடன் வழியனுப்புவோம். மீண்டும் அவர் நாட்டுக்குத் திரும்பி வந்து இச்சபையில் சுண்டிக்குளி வட்டார உறுப்பினராக பல ஆண்டுகாலம் சேவை செய்ய வேண்டுமென்ற என் ஆசையைத் தெரிவித்து அவரை வாழ்த்துகிறேன்."

### முதல்வர் வாழ்த்து

யாழ். முதல்வர் திரு. சு. செ. மகாதேவா அவர்கள் கூறியதாவது:-

'வண்ணுர்பண்ணை வட்டார உறுப்பினர் கூறிய பிரகாரம் திரு. பீ. ச. சோமசுந்தரம் அவர்கள் பொறுமைசாலியாக இருந்ததுடன், பொறுப்புணர்ச்சியுடனும் சபையின் சகல அலுவல்களிலும் ஈடுபட்டார். 1961-ம் வருடத்தில் இருந்து சுமார் ஐந்து வருட காலமாக நேர்மையாகவும், நியாயமாகவும் பிறருக்கு கஸ்டத்தை உண்டுபண்ணி சஞ்சலத்தை உண்டு பண்ணுது தனது வட்டார வேலைகளில் கண்ணும்கருத்துமாக இருந்து சேவையாற்றியவர் திரு. சோமசுந்தரம். இதை யாரும் மறைக்கவே, மறுக்கவோ முடியாது.

'சுண்டிக்குளி வட்டாரத்திற்கு மட்டுமல்லாது யாழ். நகருக்கே அவர் பிரிவு ஒரு நாட்டமாகும். எந்தக்காரணங்களால் அவர் நாட்டைவிட்டுச்செல்ல வேண்டியேற்பட்டதோ, அப்பேற்பட்ட நிலை பொது வாழ்விற்கு உழைக்க முன்வரும் வேறெவருக்கும் ஏற்படாதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். தாம் படிப்பித்து வந்த பாடசாலைக்காகவும், தன் இன மக்களுக்காகவும், யாழ். மாநகரசபைக் காகவும் தன்னையே வருத்திக்கொண்ட ஒருவரைப்பாராட்டுவதுடன் மீண்டும் அவர் நாட்டுக்கு வந்து இச்சபையில் சுண்டிக்குளி வட்டார உறுப்பினராக வீற்றிருக்க வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன். அவர் எந்த நோக்கத்தின் பொருட்டுப் போகிருரோ அந்தக் காரியம் நல்லபடி ஈடேறி அவர் விரைவில் நாட்டுக்கு மீளவேண்டுமென்றும், மீண்டும் நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.'

### திரு. துரையப்பா பாரட்டு

முன்ஞள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்ஞள் மாநகர முதல் வருமான திரு. சு. துரையப்பா கூறியதாவது:-

'திரு. பீ. ச. சோமசுந்தரம் அவர்களை நான் பல காலமாக அறிவேன். அவர் என்னுடைய ஆசிரியர். அவர் நீதியானவர், நேர்மையானவர் மட்டுமல்ல எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் சாமாதானத்தோடு சாதுரியமாக நடந்து கொள்பவரும் கூட. நீண்ட கால உறுப்பினருாக இச்சபையில் இருந்திருக்கும் பீட்டர் மாஸ்ரர் சக உறுப்பினர்களுடன் கண்ணியத்துடன் நடந்து கொண்டு, எடுத்த காரியம் எதையும் நன்கு ஆலோசித்தே கருமமாற்றும் ஓர் அனுபவசாலியாக விளங்கியிருக்கிருர். அவரின் பிரிவு எமது சபைக்கு பெருத்த நட்டமாயிருந்த பொழுதிலும், அவரது குடும்ப நன்மையின் காரணமாக அவர் போவதால் எமது வாழ்த்துக்களைக் கூறி அவரை சந்தோசமாக வழியனுப்பி வைக்க வேண்டியவர்களாய் இருக்கிறேம். அவர் பல வருடங்களாக ஆற்றிய சேவையை இச்சபையைப் போல் யாழ்ப்பாண மக்களும், ஒருபோதும் மறக்க மாட்டார்கள்; மறக்க முடியாது.

### திரு. துரைராசசிங்கம் வாழ்த்துரை

திரு. ஆ. துரைராஜசிங்கம் கூறியதாவது:-

'இச்சபையில் ஒரு அங்கத்தவர் பாரபட்சம் காட்டாது நடந்து கொண்டாரென்ருல் அது திரு. சோமசுந்தரம் அவர்களாகத் தான் இருக்க முடியும். நேர்மையும், நீதியுமாய் விளங்கிய அவர் யாவருடனும் கண்ணியமாகப்பழகிஞர். இவர் இச்சபையில் அங்கத்துவம் வகித்த காலத்தில் யாருக்குத் தானும் மனவருத்தத்தை உண்டாக்கும்படி நடந்து கொண்டது கிடையாது. பிறரைக் கஸ்டத்துக்குள்ளும், துன்பத்துக்குள்ளும் உட்படுத்த விரும்பாதவர் பீட்டர் மாஸ்ரர். தம் கடமையில் ஒழுங்காகவும், பழகுபவர்களுடன் கண்ணியமாகவும் நடந்து கொண்ட ஒருவரின் பிரிவு துன்பத்தைத்தருவது சகசம், ஆயினும் குடும்பபாரத்தின் காரணமாக இந்நாட்டை விட்டே அவர் செல்லவேண்டியிருப்பதால் அன்னுரை நல் மனத்துடன் வழியனுப்பி வைக்கிறேம். அவர் மீண்டும் இங்கு வந்து இச்சபையில் ஒரு உறுப்பினராகச் சேவை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.'

## சுண்டிக்குளி வட்டார வேட்பாளர்



அண்மையில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுண்டிக்குளி வட்டாரத்திற்கான இடைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளராகத் திரு. நீக்கிலாப் பிள்ளை அந்தோனிப்பிள்ளை போட்டியிடுகிருர். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவிலுள்ள இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் செயலாளருமாவர்.

முப்பத்தெட்டு வயது நிரம்பப்பெற்ற திரு நீ. அந்தோனிப்பிள்ளை சிங்களம் மட்டும் சட்டத்திஞல் பாதிக்கப்பட்ட ஒரு அரசாங்க ஊழியராவர். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விடுதலை இயக்கங்களில் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்ததுடன் சிறந்த சமூகசேவையாளருமாவர்.

இவ்வட்டார முன்னுள்உறுப்பினரான திரு. பீட்டர் சோமசுந்தரம் புறாணிக்குச்செல்லுகையில் வட்டார வாக்காளர்களுக்கு விடுத்த பிரியாவிடைச் செய்தியின் இறுதியில் 'இதுவரை காலமும் அடியேனுக்குத் தந்த தங்கள் ஆதரவை தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சி வேட்பாளராகிய திரு. நீ. அந்தோனிப்பிள்ளை அவர்களுக்குக் கொடுத்துவரவேண்டுமென்று அன்பாய்க் கேட்டுக் கொள்கிறேன்' என்று வேண்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிரிய இடமாற்றம்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போடும் கூச்சலை எண்ணற்ற துன்பங்களைச் சுமக்கும் வெளிமாகாண ஆசிரியர்கள் ஏற்கவேண்டுமா என்ன? சொந்த இடங்களில் வருடக்கணக்காகப் பொழுது போக்குப்போல் கடமைகழிக்கும் ஆசிரியர்களுக்கு, இலங்கையின் பல பகுதிகளிலும் பரந்து, நலிந்து, இளைத்துக் களைத்துச் சேவைசெய்யும் வெளிமாகாணத் தமிழாசிரியர்கள் குறைந்தவர்களல்ல.

### உண்மையை உணருங்கள்

கல்வியில், கடமை-கண்ணியம்—பொது நோக்கு—என்றெல்லாம் கற்பிக்கும் ஆசிரியர்களும்; ஒற்றுமை, செளஜன்யம், உரிமை நலம், என்றெல்லாம் வரையறுத்துள்ள ஆசிரியர் சங்கங்களும்; காலத்துக்குக் காலம் எழுப்பும் கூச்சல், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில், அதிலும் கஷ்டங்களுக்கு மத்தியிற் கடமையாற்றும் பல வருடங்களைக் களித்துள்ள ஆசிரியர்களுக்குப் பொருந்துவதாக இல்லை.

வெளிமாகாணங்களிற் சேவை செய்யும் ஆசிரியர்கள், போக்கு வரத்திஞலும், பொருந்தாத சீதோசணத்திஞலும், தரமற்ற வாழ்க்கை வசதிகளிஞலும் பலவழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கும் பிள்ளை குட்டிகள், வீடுவாசல், குடும்பப் பொறுப்புகள் என்பனவும் உண்டு. இவற்றை உள்ளூர் ஆசிரியர்களும்; சங்கங்களும்; பிரதிநிதிகளும் அறிந்து, உணர்ந்துபார்ப்பது அவசியம்.

### திட்டம்

மாற்றத் திட்டம் பொதுவான ஒன்ருக அமைக்கப்படுவது அவசியம். சுதந்திரன் கட்டுரையாளர் 'பூங்குன்றன்' கூறுவதுபோல் ஆசிரியர் இடமாற்றத் திட்டம் அமைவது நன்று. குறிப்பிட்ட ஒரு வரையறுக்கப்பட்டகாலம் சகல ஆசிரியரும் வெளிமாகாணங்களில் சேவை செய்ய வேண்டும். அக்காலங்களில் அவர்களுக்கு ஓர் விசேட வாழ்க்கைப்படி மாகாணத்துக்கு மாகாணம் தூரத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப வழங்கப்படவேண்டும். இத்தகைய நல்ல திட்டம் அமுலாகும் பட்சத்தில்வெளிமாகாணங்களிலுள்ளதமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலை தவிர்க்கப்படும். யாவரும் சமசந்தர்ப்பத்தைப்பயன்படுத்த முடிவதோடு பிரச்சினைகளும் ஓரளவு விடுவிக்கப்படும்.

நியாயமான மேற்கூறியது போன்ற நல்ல திட்டத்தை அமுலாக்கும்போது தனிப்பட்ட சலுகைகளுக்கும் தலையீடுகளுக்கும் இடமில்லாதவாறு வித்தியாபகுதி இயங்க நல்ல சூழ்நிலை ஏற்படும். இத்தகைய நல்ல சூழ்நிலையை எதிர்காலத்தில் உருவாக்க ஆசிரியர் சங்கங்களும் பிரதிநிதிகளும் வித்தியாபகுதியோடு பெருந்தன்மையாக ஒத்துழைக்க வேண்டுமென்பதே எங்கள் அவா. சகல வெளிமாகாண ஆசிரியர்களும்; நல்நோக்குள்ள, பரந்த மனப்பான்மையுள்ள உள்ளூர் ஆசிரியர்களும் இத்திட்டத்தை ஆதரிப்பார்களென நம்புகிறேம்.

## பிரதமரிடம் பதிலளிக்கவில்லை

மல்வத்தை மகா சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் வண. பலிபான சந்தானந்த தேரோ பிரதமர் டட்லி சேனநாயக்காவைச் சந்தித்த போது, 'ஜனதின' பத்திரிகையில் வெளியிடப்பட்ட டட்லி—செல்வநாயகம் ஒப்பந்தம் பற்றி அவர் கேட்டாரென்றும், அதற்குப் பதிலளிக்காமல் பிரதமர் மெளனம் சாதித்தாரென்றும் அறியப்படுகிறது.

—ஜனசத்திய (21-11-65)

## "சிங்கள பொலிசார் வேண்டாம்"

"வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு சிங்களப் பொலிஸ் அதிகாரிகளை அனுப்ப வேண்டாமென தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து அமுலாகும் பொலிஸ் ஊழியர்கள் இடமாற்றத்தையொட்டி தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சிங்கள பொலிசார் ஏராளமான பேர் அனுப்பப் படுவர்.

கடந்த சில மாதங்களாகத் தமிழ்ப் பிரதிநிதிகள் எடுத்த முயற்சியின் விளைவாக சிங்கள அதிகாரிகளைத் தமிழ்ப் பிரதேசத்திலிருந்து அகற்றிவிட முடிந்தது. புதிய இடமாற்றத்தையொட்டி தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்களப் பொலிஸ் அதிகாரிகள் அனுப்பப்படுவதைத் தடுப்பதற்காக இப்பொழுது பெரும் போராட்டம நடத்தப்படுகிறது. இது பற்றி ராஜ்ய மந்திரிக்கும், பொலிஸ் அதிபருக்கும் தமிழரசுப் பிரதிநிதிகள் பல மகஜர்களை அனுப்பியிருக்கின்றனர். அத்துடன் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மக்களிடமும் இது சம்பந்தமான மகஜர்களுக்குக் கையெழுத்து வாங்கப்படுகின்றன,"

—ஜனதின (13-10-65)




# கனடாவின் சிறப்பு

**ஆ. விஜயரெத்தினம்**

அமைப்பு முறையால் அதிட்டமுள்ள நாடு கனடா. இதனுடைய அண்டை நாடாக அமைந்து இருப்பது அமெரிக்கா. கனடாவின் தலைநகர் ஒட்டவா. ஒட்டவா என்னும் ஆற்றின் கரையில் அமைக்கப்பட்ட அழகான நகரம் இது. கவினுறு சட்டிடங்கள், கண்ணைக் கவரும் வண்ணமலர்கள் உள்ள பூங்காக்கள், கலைப் பொருள்கள் மலிந்த காட்சி நிலையங்கள், தெருத்தோறும் தேவாலயங்கள்—இவைதான் ஒட்டாவா, பார்ப்பவர் மனதை கவரக் கூடியதாக அமைந்து இருக்கின்றது.

கனடாவின் வட கோடியில் பனி பெய்த வண்ணம் இருக்கும்; வேனிற் காலத்தில் அங்கு நள்ளிரவில் சூரியன் தெரியும்; அப்பகுதியில் எஸ்கிமோக்களும் பாதிரிமார்களுமே வாழுகின்றனர். கனடாவின் தென்கோடியில் ஏரிகள் நிறைந்து இருக்கின்றன. ஆறுகளும் நயகரா அருவியும் ஆங்காங்கு அமைந்து கனடாவுக்கு வளமும் வாழ்வும் தருகின்றன.

கனடாவில் ஆற்றுவளம் அளவு கடந்து உள்ளது. குறிப்பிடத்தக்க பெரிய ஆறுகள் மக்கன்சீ ஆறும், சென்ட் லாரன்சு ஆறும் ஆகும். இவை தவிர நூற்றுக் கணக்கான சிற்றாறுகள் அங்கு ஓடுகின்றன.

இயற்கை அன்னை தன் வளத்தை வாரி வழங்கியுள்ள பகுதி நயகரா நீர் வீழ்ச்சிப் பகுதியாகும். மேகம் பொத்துக் கொண்டு வருவது போல, இங்கு நீர் பொழிவதாலும், அது பொழியும் ஓசைபலமைல் தொலைவுக்குக் கேட்பதாலும், இதனை 'அருவி' என்று கூறுவதற்கில்லை. நயகராவில் நீராடுதல் நினைக்கவும் இயலாத ஒன்றாகும். பார்த்து மகிழவும், பயன்படுத்தி வளப்படுத்தவும், நயகரா நீர் வீழ்ச்சி கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் உதவுகின்றது. இந்த நீர்வீழ்ச்சியின் நீளம் 4000 அடி; இந்த நீர்வீழ்ச்சி இரு பகுதிகளாக ஒன்று அமெரிக்காவுக்கும் மற்றது கனடாவுக்கும் செய்கிறது. அமெரிக்காப் பகுதியிலுள்ள நீர்வீழ்ச்சியின் தொலைவு 1400 அடி; கனடாப் பகுதியில் 2600 அடி தொலைவு உடையதாகும்.

கனடாவில் வசிக்கும் மக்களை பற்றிகவனிப்போம். கனடாவின் மக்கள் தொகை ஒரு கோடியே எண்பது லட்சம். கனடாமக்களில் பாதிப் பேர் பிரிட்டனில் இருந்து வந்தவர்கள். இங்கு வசிப்பவர்களில் 100க்கு 54 பேர் பிராட்ஸ்டண்டு கிறிஸ்தவராகவும் 43, வீதமானோர் கத்தோலிக்கராகவும் மிகுதி, பேர்கள் வேறு மதத்தவர்களாகவும் உள்ளனர்.

கனடாவில் இரண்டு மொழிகள் பேசப்படுகின்றன. ஒன்று ஆங்கிலம், மற்றது பிரெஞ்சு. பாரிஸ் நகரத்துக்கு அடுத்தபடியாக பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் மிகுதியாக உள்ள பெரு நகரம் மான்ட்ரீஸ்தான். ஐக்கிய அமெரிக்காவில் ஆங்கிலம் மட்டுமே பேசப்படுவதும், அதன் அண்டை நாடான கனடாவில் இரு மொழிகள் பேசப்பட்டு வருவதும் சிறப்பாக கவனிக்கதக்கதாகும். இவ்விரு மொழிகளும் ஆட்சி மொழியாக உள்ளன. கனடாப் பாராளுமன்றத்திலும் நீதிமன்றங்களிலும் இருமொழிகளுக்கும் சம உரிமை உண்டு. பிரெஞ்சைத் தம் மொழியாகக் கொண்டவர்கள் தொகை ஆங்கில மொழியினரின் எண்ணிக்கையிலும் பார்க்க நான்கில் ஒரு பங்கு தான். அவ்வாறிருந்தும் சிறுபான்மையினரான பிரெஞ்சு மொழியாளருக்குப் பொது வாழ்வில் ஒத்த நிலை வழங்கப் பெற்றிருத்தல் பாராட்டுக்கு உரியது; முன்னேற விரும்பும் நாடுகளும், ஒற்றுமையை பாதுகாக்க விரும்பும் நாடுகளும் கனடாவின் முன்மாதிரியைப் பின் பற்றுவது அவசியம்.

## மனமே அன்னையை நினை!

**கல்முனைக் கலைராஜி**

அன்னையை நினை—மனமே
அன்னையை நினை;

உன்னை உலகில் உதிக்கச் செய்து
தன்னை ஒறுத்து உன்னை வளர்க்கும்
அன்னையை நினை—மனமே
அன்னையை நினை

ஈரைந்து திங்கள் வயிற்றிற்றாங்கி
இன்பும் துன்பும் இடையிடைதாங்கி
சீராய்ப் பெற்றுப் பாருக்கீயும்
அன்னையை நினை—மனமே
அன்னையை நினை

அல்லும் பகலும் நித்திரையின்றி
எல்லையில்லா இடர்கள் தாங்கி
சொல்லும் பொருளும் போலுன்னை(க்)
கட்டிக்காத்து வளர்த்திடும்
அன்னையை நினை—மனமே
அன்னையை நினை;

கண்ட இடங்களிற் கையெடுத்து
'கடவுளே கண்மணிதனைக்காப்பாய்'
என்று நாளும் தொழுதிட்டு
கண்ணீர் சிந்திக் காத்திடும்
அன்னையை நினை—மனமே
அன்னையை நினை;

பள்ளிக் கனுப்பிப் படித்தலனுக்கி
பண்பும், அறிவும், பயிலச் செய்து,
கண்மணிச்செல்வன் கல்வியிற்றேர்ந்தா
என்னச் சான்றோர் சொல்வது கேட்டுன்
பெற்ற பொழுதினும் பெரிதுவக்கும்
அன்னையை நினை—மனமே
அன்னையை நினை

## வினு விடை

**அ**மெரிக்கா எப்பொழுது அணுகுண்டுக் தயாரிக்க ஆரம்பித்தது?

1943-ம் ஆண்டில்.

**பி**ரிட்டன் பாராளுமன்ற அங்கத்தவராக 64 வருடங்கள் பணி புரிந்த பிரதமா யார்?

சேர். வின்ஸ்டன் சர்ச்சில்.

**அ**மெரிக்க சனாதிபதி ஜோன்சனை தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் யார்?

குடியரசுக் கட்சி வேட்பாளர் செனட்டர். கோல்ட் வாட்டர்.

**ஜ**ப்பானிலுள்ள கிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டு வீசப்பட்டது எப்போது?

1945-ம் ஆண்டு ஆகஸ்டு 9-ந் திகதி.

**நோ**பல் பரிசைப் பெற மறுத்த ஆங்கில நாட்டு இலக்கிய மேதை யார்.

பெர்னுட்சா.

**கூ**டிதங்களுக்கு தபால் தலை ஒட்டும் முறையை முதன் முதல் ஏற்படுத்தியவர் யார்?

திரு. ரௌலன்ட் கல்.

"**பா**டும் பாலம்'' எங்கே எப்படிக் கட்டப் படுகிறது?

மேற்கு ஜெர்மனியில் ரைன் ஆற்றின் குறுக்கே.

## கடவுள் ஒருவர் உண்டு

'ஜெயம்'

கடவுள் ஒருவர் உண்டு—நம்
கடமை அவரின் தொண்டு
உடமை காக்க வேண்டில்—நம்
உரிமை பெறவே வேண்டும்

தமிழே நமது உயிராம்—நற்
தாயை யொத்த பொருளாம்
அமிழ்தே தந்த போதும்
—அதன்
அருமை மறத்தல் தீதாம்

உயிர்கள் எல்லாம் ஒன்றும்
—எனில்
உயர்வு தாழ்வு வேண்டாம்
பயிர்கள் விளைவ தெல்லாம்
—இப்
பாரில் வாழ்வெவ் உயிர்க்காம்

அன்பும் ஆற்றல் அறிவும்
—நல்
அறமும் வளர்க்க வேண்டும்
பண்பும் பாசம் அதுவும்
—உடன்
பழகி வரவே வேண்டும்

## "மண்ணிற்கு மேலே"

புதிய வளர் கதை

அரியாலையூர்
த. இந்திரலிங்கம்
எழுதுகிறார்

?.?.??

## வளர்மதி பற்றி...!

சென்ற 14-11-65-ல் வளர்மதியில் செல்வி. எஸ். பத்மாவதி எழுதியிருந்த 'பொறுமைப்படாதீர்' என்ற கதை வேடிக்கையாகவும், சிரிப்பூட்டும் வகையிலும் அமைந்துள்ளது. இக் கதையை வளர்மதி உறுப்பினருக்கு அளித்த மாமாவுக்கும், உருவாக்கிய பத்மாவுக்கும் எனது நன்றிகள்.

—வே. கி ஷ்ணபிள்ளை.

● உங்கள் பகுதியான வளர்மதியில் பிரசுரிப்பதற்கு சிறு கட்டுரைகள், நகைச்சுவைக் கதைகள், வினு விடைகள், சுவையான செய்திகள் தேவைப்படுகின்றன.

● ஒவ்வொரு விடயமும் முழு அளவு தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

● தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாகவும், நிறைய இடைவெளிகள் விட்டும் எழுத வேண்டும். இவற்றையனுப்பும் கடித உறையின் வலது மூலையில் அனுப்பும் விடயம் கட்டுரையா, கதையா, வினு விடையா, செய்தியா என்பதைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்ப்போம்.

## தொடுத்தோம்

1 அமெரிக்க முதல் சனாதிபதி யார்?
2 கானு சனாதிபதியின் பெயரென்ன?
3 பின்லாந்து சனாதிபதி யார்?
4 நெப்போலியன் எந்த ஆண்டில் இறந்தான்?
5 திரு. வ. உ. சிதம்பரனார் ஓட்டிய முதலிரண்டு கப்பலின் பெயரென்ன?
6 'கிதாஞ்சலி' எந்த ஆண்டில் வங்காள மொழியில் பிரசுரிக்கப்பட்டது?
7 குருடர்கள் படிப்பதற்கு 'பிறெய்லி' எழுத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
8 ஆபிரகாம் லிங்கன் எப்போது சனாதிபதியானார்?
9 'நைலானை' கண்டு பிடித்தவர் யார்?
10 ஓவியர் ரவிவர்மா எப்போது காலமானார்?

## விடுத்தோம்

1 ஜார்ஜ் வாசிங்டன்.
2 நிக்குருமா.
3 டாக்டர் கெக்கோன்.
4 1821-ல்.
5 லாவோ, காவியா.
7 லூயிஸ் பிறெய்லி என்னும் ஒரு குருடர்.
6 1909-ல்.
8 1865-ல்.
9 காரோத்தர்ஸ் என்னும் அமெரிக்கர்.
10 1906-ல்.

தொகுப்பு:
எஸ். தோமஸ் பிள்ளை
பசறை குருப்.

**வ**ளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும் உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யில் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 5

பெயர் ____________________

பாடசாலை ____________________

முகவரி ____________________

____________________

____________________ ____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் | கையொப்பம்

# அனைவரும் போற்றும் 6வது வாரம்!

**பார்த்தோரை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும்**
**பாங்கான திரைச் சித்திரம்!**

## கிங்ஸ்லி பிளாஸா நவா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சந்தியா (கம்பளை) கல்யாணி (நாவலப்பிட்டி)


விஜிதா (ஹட்டன்) லட்சுமி (இரத்தினபுரி)

**எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி**
**நம்பியார், ரங்கராவ், பண்டரிபாய், தங்கவேல்,**
**ரத்னு, நாகேஷ், பேபி சகிலா**

மற்றும் பலர் நடித்த

# எங்க வீட்டுப் பிள்ளை

(கண்கவர் ஈஸ்ட்மென் வர்ணம்)



---

## கொழும்பில் 8வது வாரம்!

## செல்லமகால்

**மற்றும் சில திரைகளில்!**



அதிர்ச்சி தரத்தக்க
சம்பவங்கள் பல
மலிந்த

# புதிய பறவை

(ஈஸ்ட்மென் கலர்)!

**சிவாஜி கணேசன்,**
**சரோஜாதேவி,**
**சௌகார் ஜானகி,**
**நாகேஷ், மனோரமா**

நடித்தது

---

உல்லாசப் பொழுது போக்குக்கு உரிய உயர் தனிச் சித்திரம்!

**2 வது வாரம்!**

**கெயிட்டி** (கொட்டாஞ்சேனை) **ஓடியன்** (மவுண்ட் லவீனியா) **இம்பீரியல்** (மட்டக்களப்பு)

**ருத்ரா** (திருகோணமலை) **வின்சர்** (யாழ்ப்பாணம்)


# உல்லாசப் பயணம்

எஸ். எஸ்.
ராஜேந்திரன்,
விஜயகுமாரி,
எம். ஆர்.
ராதா,
தங்கவேலு,
அசோகன்

நடித்தது



---



# டிசம்பர் 2-ம் திகதி

## வியாழன் முதல் குதூகல ஆரம்பம்!

**சென்ட்ரல்** [மருதானை] **ஈரோஸ்** [பாமன்கடை] **ராணி** [யாழ்ப்பாணம்]

**ராஜேஸ்வரா** [மட்டக்களப்பு] **ஜோதி** [திருகோணமலை] **லிபேர்டி** [ஹட்டன்[

- **குழந்தை உள்ளம் படைத்தவன் முத்து!**
  **ஆனால்......அவன் முரடன்!**
- **பெற்றாலும் அடக்க முடியாத அவனைத்**
  **தூய அன்பினால் கட்டிப் பிணைத்து விடுகிறாள் சீதா!**

இது ஓர் ஒப்பற்ற உணர்ச்சிச் சித்திரம்!

★ நடிகர் திலகம் முரட்டுப் பாத்திரத்தில் சிறப்பாக நடித்திருக்கிறார்!

சிவாஜி கணேசன்—தேவிகா—பந்துலு—ராஜம்மா—அசோகன்—பிரேம் நசீர்
சந்திரகாந்தா—நாகேஷ்—கருணாநிதி—வி. கே. ராமசாமி—பேபி ஷகிலா
மற்றும பலர் நடித்த

**பத்மினி பிக்சர்ஸ்**

# முரடன் முத்து

இப் பத்திரிகை இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ. இலக்கத்தில்
1965-ம் வருடம் நவம்பர் மாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.